உ
சிவமயம்

# அருள் ஒளி



வெளியீடு : ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை,
இலங்கை.

**இயற்கைத் தெய்வமே - நாம்**
**இடர் இன்றி வாழ இன்னருள் தா!**


தை மாத
இதழ்

மலர்
30



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிவத்தமிழ்ச்செல்வி. அன்னை கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி J.P. அவர்களின் முத்து விழா 07-01-2005 காட்சிகள்

பிரதம விருந்தினர் கௌரவ திரு.தெ.ஈஸ்வரன் (மொறிசியஸ் நாட்டுக்கான தூதுவர்) மங்கல விளக்கு ஏற்றி விழாவை ஆரம்பித்து வைக்கும் காட்சி.



## அறக்கொடை வழங்கல்




யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடாதிபதி டாக்டர். க.சிவபாலன் அவர்கள் அறக்கொடையைப் பெறுகிறார்.

புற்றுநோய் வைத்திய நிபுணர் டாக்டர் ந.ஜெயக்குமார் அறக்கொடையைப் பெறுகிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:
செஞ்சொற்செல்வர்
திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:
சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2005 தாரண வருடம் தை மாதம்

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்
தெல்லிப்பழை, இலங்கை.

மலர் 30

## இயற்கை அன்னையை இறைஞ்சுவோம்

இயற்கையே இறைவன் என்பது இந்துக்களின் நம்பிக்கையாகும். நிலம், நீர், காற்று, ஆகாயம், தீ ஆகிய ஐந்தினையும் பஞ்சபூதங்கள் என அழைத்து அவற்றை வணங்கும் மரபு இந்து பாரம்பரியத்தில் முதன்மைபெற்று விளங்குகிறது. இயற்கையை இறைவனாகக் கண்ட மெய்ஞ்ஞானிகள் அவற்றுக்கு நிகராக எதுவுமே இல்லை என்றார்கள். இவ்வுலகில் விஞ்ஞானம் எத்தனையோ விந்தைகளைக் காட்டியது உண்மைகள். எனினும் இயற்கையை வெல்ல எவராலும் இயலாது என்ற தத்துவத்தை யாவரும் ஏற்றுக்கொள்வர். கடந்த மாதம் இருபத்தாறாம் நாள் உலகையே திகைப்பில் ஆழ்த்திய "சுனாமி" பேரலை ஏற்படுத்திய அதிர்ச்சியில் நாம் அனைவரும் அச்ச உணர்வில் இருந்து விடுபடமுடியாது தவிக்கிறோம். எம் மண்ணிலும் இந்து சமுத்திரப் பிராந்தியத்திலும் ஏராளமான உயிர்கள் கடலலைக்கு இரையான கண்ணீர்க்கதை வர்ணிக்க முடியாதது. போரின் அனர்த்தங்களினால் துன்புற்ற மக்களை நிலைகண்டு கவிஞர் ஒருவர் பின்வருமாறு பாடினார். "கடலுக்குக் கூட எல்லை வைத்த கடவுளே ஈழத்தமிழரின் கண்ணீருக்கு எல்லை வைக்க மாட்டாயா?" இன்று ஒரு கவிஞன் "கடலுக்கும் எல்லையில்லை ஈழத்தமிழரின் கண்ணீருக்கும் எல்லையில்லை" என்று பாடுகிறான். ஒரே குழியில் பலரது உடலை ஒன்றாகப் புதைத்த பரிதாபம் இப்புவியில் ஏன் நடந்தது? வடக்கிலும் கிழக்கிலும் தெற்கிலும் வாடிப்போய் நிற்கும் உறவுகளை இழந்த உற்றவருக்கு ஆறுதல் சொல்ல வார்த்தைகள் இல்லை. இயற்கைத் தெய்வமே என் முன்னோர்கள் காலையும் மாலையும் கரங்கூப்பி வழிபட்ட மரபை நாம் தொலைத்துவிட்டோம் என்று தண்டனை தந்தாயா? தர்மம் இல்லாத இவ்வுலகை இயற்கை மூலம் எச்சரிக்கை செய்யவேண்டும் என்று நினைத்தாயா? எதுவானாலும் உன்னை வணங்குவதைத் தவிர எமக்கு வேறு வழியில்லை. இயற்கை அன்னையே இடரில்லாத வாழ்வு இவ்வையகத்திற்கு நீ தரவேண்டும். அச்சம் இன்றி இவ் அவனியில் அனைவரும் வாழ உன்னை அனுதினமும் வணங்குவோம் ஆறுதல் தா என்று பிரார்த்திப்பதை விட மனிதர்களாகிய எம்மால் வேறு என்ன செய்ய முடியும். இயற்கைத் தெய்வத்தை நாட்டவர் அனைவரும் நாளும் துதிசெய்ய வேண்டும் என்பதை என்றும் உணர்ந்த மணிவாசகப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழுதகை துன்பம் துடைப்பாய் போற்றி
அழிவு இலா ஆனந்தவாரி போற்றி
அழிவதும் ஆவதும் கடந்தாய் போற்றி
முழுவதும் இறந்த முதல்வா போற்றி
மான்நேர் நோக்கி மணாளா போற்றி
வான் அகத்து அமரர் தாயே போற்றி
பார் இடை ஐந்தாய்ப் பரந்தாய் போற்றி
நீர் இடை நான்காய் நிகழ்ந்தாய் போற்றி
தீ இடை மூன்றாய்த் திகழ்ந்தாய் போற்றி
வளி இடை இரண்டாய் மகிழ்ந்தாய் போற்றி
வெளி இடை ஒன்றாய் விளைந்தாய் போற்றி
அளிபவர் உள்ளத்து அமுதே போற்றி
கனவிலும் தேவர்க்கு அரியாய் போற்றி
நனவிலும் நாயேற்கு அருளினை போற்றி

என்று இயற்கை வழிபாட்டை ஞாபகமூட்டினார். இன்றைய சமூகம் இயற்கை வழிபாட்டிற்கு முதன்மை கொடுக்கத் தவறிவிட்டது. முன்னோர்கள் வழிபாட்டிற்கும் வாழ்வியல் நீதிக்கும் முதன்மை கொடுத்தனர். இனிமேலும் இயற்கையை உணர்ந்து நாம் வழிபாடு செய்தல் வேண்டும்.

கடலலைகளின் அனர்த்தங்களினால் துன்புற்றவர்களுக்கு உதவவேண்டும் என்ற பெருநோக்கோடு பல்லாணிரம்பேர் உதவ முன்வந்தமை நன்றிக்குரியது. மதம், மொழி, இனம் கடந்த நிலையில் பலரும் உதவ முன்வருவது பாராட்டுக்குரியது. இந்துமத நிறுவனங்கள் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் அகதிகளை காக்கும் பணியில் இம்முறை பெரிதும் அக்கறை காட்டியுள்ளனர். புலம்பெயர்ந்த நாடுகளில் உள்ள இந்துக்கோவில்கள் பல்வேறு பணிகளை செய்ய முன்வந்துள்ளனர். ஈழத்திலும் அகில இலங்கை இந்து மாமன்றம் இராமகிருஷ்ணமிஷன், சந்நிதியான் ஆச்சிரமம், துர்க்காதேவி தேவஸ்தானம் போன்ற சமய நிறுவனங்களும் ஏனைய ஆலயங்களும் தர்மப் பணிகளில் ஈடுபட்டிருப்பது பாராட்டுக்குரியது. - ஆசிரியர்

## புறப்படு நீயும் புதுயுகம் படைக்க!

ஆழியது குமுறியது!
அரைமணி நேரத்தில்
அனர்த்தங்களை
உண்டாக்கியது!
அரக்கன் அலை
வடிவாக வந்தானோ!
ஊழிக் காலந்தான்
வந்துற்றதுவோ!
முற்றியகலியனோ
நாற்பதாயிரத்திற்கு
மேற்பட்டோரை
முழுதாகச் சுனாமி
காவு கொண்டதுவோ!

முத்து விளையும்
உப்புக்கடலிங்கே
பத்துநாள் சிசுக்களையும்
பலியெடுத்தானே!
அத்தனையுமிழப்பினும்
நெஞ்சுறுதியை
இழக்காதே!
பூமிவாழ்க்கை
நீர்க்குமிழிதானே!
புரிந்து கொண்டு
புறப்படு நீயும்
புதுயுகம் படைக்க!

மாருதி - ஆவரங்கால்

நன்றி - உதயன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தைப்பூசத்திருநாள்

கலாநிதி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி

தமிழ் மக்களின் இனிய திருநாட்களில் தைப்பூசம் மிகப்பேறு பெற்றது. இந்துக்கள் இல்லங்கள், ஆலயங்கள் தோறும் இப்பூசநாளில் புனிதம் பேணுவர். தை பிறந்தால் தரணியெங்கும் வழி பிறக்கும் என்பது நம் மூதாதையர் நம்பிக்கை. ஏனெனில் தைமாதம் உழவர் மாதம். இந்த உழவரின் உழைப்பு பலன் யாவும் பெறுமாதமென்று கூடச்சொல்லலாம். புரட்டாதி, ஐப்பசி, கார்த்திகை மாதங்களில் விதைவிதைத்து உழவன் கண் தூங்காது காத்த நெற்பயிரின் விளைவு நெல் மணிகளாக வீடு வந்து சேரும் மாதம் இந்த தைமாதம். “உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்பவர்” என்பதற்கிணங்க உழுதவன் உண்டு களிப்புறும் மாதமாக அவனின் நெல் மணிகள் பூத்துக் குலுங்கிக் காய்த்துப் பழுத்து பழுத்து பதர் நீங்கிப் பக்குவப்படுத்தி வீட்டிற்குக் கொண்டு வந்து விழாவெடுக்கும் நாளாக தைமாதத்தில் தைப்பூசம் விளங்குகிறது. அது மட்டுமல்லாது பன்னிரு இராசிகளில் கர்க்கடக இராசியில் அங்கம் வகிக்கும் இப்பூச நட்சத்திர நாள் புராண இதிகாசங்களால் அலங்கரிக்கப்படுவதோடு மிகவும் பேறுபெற்ற திருநாளாகக் கணிக்கப்படுகின்றது.

இந்துக்கள் தைப்பூச நாளில் புதிர் எடுத்தல் புதிர் உண்ணல் என்ற நடைமுறைகளைப் பின்பற்றுகின்றனர். மார்கழியுடன் பழையதைக் கழித்து தையுடன் புதியதைச் சேர்க்கும் நாளாக இப்பூசநாள் விளங்குகின்றது. உழவனின் வியர்வைத் துளிகள் நெல் மணிகளாக வெளிக்கொணர்ந்து அவன் வெற்றிக் களிப்புடன் வீட்டிற்கு ஒருபிடி கதிரை அறுத்து வந்து சுவாமி முன் படைத்து விழாவெடுப்பதுவும் அன்றைய தினம் தான். முதன் முதலாகக் கொண்டு வந்த நெல்லைக் கொண்டு அமுது படைத்து அவை அக்கம் பக்கத்தவருக்கும் ஏழை எளியவர்களுக்கும் பகிர்ந்தளித்து இன்புறும் நாளாகவும் இது விளங்குகிறது. கிழக்கு மாகாணத்தில் இன்றும் பல கிராமங்களில் புதிது உண்ணும் வழக்கம் நடைமுறையில் இருப்பதோடு எல்லோரும் இந்தப் புதிது உண்ணலை தைப்பூச நாளில் கொண்டாடி மகிழ்வதையும் இன்றும் காணக்கூடியதாக உள்ளது. சம்பந்தர் போன்ற நால்வரால் பாடப்பட்ட புனித நாள் இந்தத் தைப்பூசம் “தைப்பூசங் காணாதே போதியோ பூம்பாவாய்” எனக் குறிப்பிடுவதில் இருந்து இதை உணர்ந்து கொள்ள முடிகிறது.

மகர மாசமாகிய தை மாதம் தமிழர்களுக்கு விசேட மாதமாக அமைவது போல் சிங்கள மக்களுக்கும் புனித மாதமாகக் கருதப்படுகின்றது. காரணம் புத்த பகவான் ஞானோதயம் பெற்று கயிலையில் இருக்கும் போது ஈழநாட்டைப் பற்றி நினைத்ததும் தைப்பூச நாளிலாகும். ஞானிகளின் கர்வத்தை அடியோடு அடக்கி ஞானம் கொடுத்ததும் தைப்பூசத் திருநாளிலாகும். தில்லை மூவாயிருவருக்கும் மருமகன் இரணியவர்மனுக்கும் தில்லையில் நடராசப் பெருமான் தரிசனம் கொடுத்ததும் தைப்பூசத் திருநாளிலாகும்.

தைப்பூசமானது வியாழக்கிழமையும் சித்தயோகமும் பூரணை கூடிவரப் பெற்றால் அதைவிடப் பொன்னாள் இல்லையென்று கூறலாம். தைப்பூசத் திருநாளை சைவர்கள் தாம் வாழும் இடமெங்கும் பெருவிழாவாக எடுத்து இறைவனைத் துதி செய்கின்றார்கள். இலங்கையில் இருபெரும் சமூகம் இருப்பினும் தைப்பூசம் இவர்களுக்கெல்லாம் பொதுவிழாவாக அமைகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறப்புக்குக் காரணம் ஆசைகளே

அகஸ்திய முனிவருக்கு ஒரு சமயம் விவசாயி ஒருவர் மேல் கருணை ஏற்பட்டது. அவ்விவசாயி நல்ல குணம் உடையவன் என்று நினைத்து அவனருகிற் சென்றார். "நான் உன்னை இப்போதே வைகுந்தத்திற்கு அழைத்துச் செல்கிறேன்" என்றார். அந்த அழைப்பை ஏற்று விவசாயி வரவில்லை என்று சொல்லாமல் "எனது புத்திரர்கள் யாவரும் ஒன்றுமறியாத சிறுபராயத்துடன் இருப்பதால் பத்து வருடங்கள் கழித்து உங்களுடன் தப்பாமல் வருகிறேன்" என்று சொல்லித் தப்பித்துக் கொண்டான்.

பத்து வருடங்கள் கழிந்தபின் அகத்தியர் மறுபடியும் வந்தார். அவர் "இப்பொழுது வா" என்றார். "பெரியமகனுக்கு கல்யாணமாகி இருக்கிறது. பேரப்பிள்ளைகளைக் காண ஆசையாயிருக்கிறது; இன்னும் ஒரு பத்து வருடங்கள் போகட்டும், கண்டிப்பாக உங்களுடன் வைகுந்தத்திற்கு வருகிறேன்" என்று சொன்னான் விவசாயி. சரி என்று சொல்லி முனிவர் சென்று விட்டார்.

மறுபடியும் பத்து வருடங்கள் சென்றபின் வந்து பார்த்த போது, விவசாயி இறந்து இரண்டு வருடங்கள் ஆகிறதென்று கேள்விப்பட்டார். ஆனால் தனது ஞான திருஷ்டியினால் பார்த்தபோது, அந்த வீட்டைக்காவல் செய்த நாயைப் பார்த்தார் அந்த நாயே விவசாயி என்பதை யோக திருஷ்டியின் மூலம் தெரிந்து கொண்டார். உடனே அந்த நாய்க்குப் பூர்வஞானத்தைக் கொடுத்து "வா! போகலாம்" என்று கூப்பிட்டார். அந்த நாய் உருவத்திலிருந்த அந்த விவசாயி ஒப்புக்கொள்ளவில்லை. "குழந்தைகள் எல்லோரும் ஒன்றுமே தெரியாதவர்கள்! இரவு நேரத்தில் திருடர்கள் வந்தால் எப்படித் தூங்கமுடியும்? அவர்களுடைய கதி என்னவாகும்? இன்னும் பத்து வருடங்கள் தாண்டினால் மற்றவர்களும் கூடப் பெரியவர்களாகி விடுவார்கள் அப்பொழுது எல்லா வேலைகளும் சரியாகிவிடும் அதன் பிறகு நான் உங்களுடன் எந்த வித சிந்தனையும் இல்லாமல் வைகுந்தத்திற்கு வரலாம்" என்று சொல்லிற்று அந்த நாய் சரி என்று சொல்லி அகஸ்தியரும் சென்று விட்டார்.

மறுபடியும் அதே வீட்டுக்கு வந்தார். நாயோ காணப்படவில்லை தனது யோக திருஷ்டியின் மூலம் பார்த்தார் அந்த விவசாயி மீண்டும் ஒரு பாம்பாய்ப் பிறந்து தான் கஷ்டபட்டுச் சம்பாதித்து பூமிக்குள் ஒழித்து வைத்த நிதியைக் காவல் செய்து கொண்டிருப்பதைப் பார்த்தார். அந்தக் குழந்தைகள் மேலுள்ள ஆசையே இந்த விதமாக நாய், பாம்பாகப் பிறந்ததன் காரணம்.

அகத்தியர் அந்த விவசாயியின் குழந்தைகளைக் கூப்பிட்டு "அந்தப் பாம்பைக் கொன்றுவிட்டு அந்த நிதியை பூமியிலிருந்து எடுத்து சமமாகப் பங்கிட்டு அனுபவியுங்கள்." என்று கூறினார். அந்தக் குடும்பத்தவர் யாபேரும் சேர்ந்து அந்தப் பாம்மை அடித்துக் கொன்றார்கள். அப்பொழுதான் அந்த விவசாயிக்கு குழந்தைகளிலும், நிதியிலும், இருந்த ஆசை பூர்த்தியாயிற்று. ஆனால் நாட்டுக்காக இவ்வளவு காலமும் பாடுபட்டு சம்பாதித்தானோ அவர்களே பாம்பு ரூபமான விவசாயியைக் கொன்றார்கள்.

அச்சமயம் அவனுக்கு விவேக வைராக்கியங்கள் உண்டாயின. அதன் பிறகு தான் அவன் அகத்திய முனிவருடன் வைகுண்டப் பிரயாணத்திற்குச் சித்தமானான்.

**"ஆசைகளே பிறப்புக்குக் காரணம்"**

**(நன்றி - இறைதூதன்)**

தொகுப்பு:- **செல்வி கி. ஜமுனாதேவி,** மானிப்பாய்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

# அறப்பணிகள் புரியும் ஞானத்தாய்

சிவத்தமிழ்ச்செல்வியின் கருத்தரங்கில் சிவ. மகாலிங்கம்

சிலர் பெரிய மனிதர்களாகவே பிறக்கின்றார்கள். சிலர் தங்கள் முயற்சியினால் பெரியவர்கள் ஆகிறார்கள். சிலர் மீது பெரியவர்கள் என்ற பட்டம் திணிக்கப்படுகிறது. முத்தமிழும் காணும் முதுபெரும் தாயாக விளங்கும் அன்னை சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள் தனது பணியினால் தூய்மையான ஆத்மீக நிலையினால் தவ வாழ்வினால் இன்று சைவத்தமிழ் உலகம் போற்றும் அன்னையாகத் திகழ்கின்றார். அகிலாண்டேஸ்வரியாக அன்னை பராசக்தியாக இருக்கும் அம்பிகையின் திருவருளினால் சைவமும் தமிழும் சிறப்புற வளர்ந்திருக்கும் தெல்லிப்பழைக் கிராமத்தில் 1925ஆம் ஆண்டு அம்மையார் அவதாரம் செய்தார். அருள்நிறைந்த தெய்வமாகிய துர்க்கை அம்பாளைக் குலதெய்வமாகக் கொண்ட அம்மையாருக்கு அம்பிகையின் திருவருள் கடாட்சம் நிறையவே இருந்தது.

சமய உணர்வுடன் கூடிய ஆசிரியர்களை உருவாக்க வேண்டும் என்ற உயர் நோக்கத்தோடு சேர் பொன் இராமநாதன் அவர்களால் தோற்றுவிக்கப்பட்ட இராமநாதன் கல்லூரியில் இயங்கிய சைவ மகளிர் ஆசிரிய கலாசாலையில் ஆசிரிய பயிற்சியைப் பெற்றிருந்தார். சைவப் பண்பாட்டுடன் கூடிய ஆசிரியர் பயிற்சியைப் பெற்ற அம்மையார் தான் கற்ற கல்வியையும் பெற்ற பயிற்சியையும் சைவ சமயத்தின் வளர்ச்சிக்காகவே இன்றுவரை பயன்படுத்தி வருகின்றார். புனிதமான தெய்வீகப் பணியாகிய ஆசிரியப் பணியைச் சிறப்பாகச் செய்தமையினால் பல மாணவர்களுடைய உள்ளங்களிலும் ஞானத் தாயாக இன்றும் விளங்குகின்றார்.

மகாஜனாக் கல்லூரியின் புகழ் பூத்த அதிபர்களில் ஒருவராகிய ஜெயரத்தினம் அவர்கள் துர்க்கை அம்பாள் ஆலயத் தலைவராக இருந்த காலத்திலேயே அம்மையார் பொருளாளராகப் பல வருட காலம் பணியாற்றினார். ஜெயரத்தினம் அவர்களின் மறைவுக்குப் பின்பு இன்றுவரை துர்க்கை அம்பாள் ஆலயத்தின் தலைவராகப் பணி புரிந்து வருகின்றார்.

சமுதாயப்பணி செய்யாத சமயம் வாசனை இல்லாத பூவாகவே மாறி விடும் ஆலயங்கள் நமது சமுதாய வாழ்வின் மையப்பொருள்கள். அருள் சுரக்கும் இடங்களாக மட்டும் இல்லாது அறப்பணிகள் ஆற்றும் நிலையங்களாகவும் ஆலயங்கள் மாற வேண்டும் எங்கள் சமயத்தின் கருவூலங்களாக இருக்கும் பன்னிரு திருமுறைகள், பதினான்கு மெய்கண்ட சாஸ்திரங்கள், அறநூல்கள் ஆகியவற்றை விளக்கும் கல்விச் சாலைகளாகவும் விளங்க வேண்டும். கலைகள் எமது சமயத்தோடு பின்னிப் பிணைந்தவை. அறவுணர்ச்சியைத் தருவதோடு ஆன்மீக நெறிச் சிந்தனைக்கும் கலைகள் துணையாக உள்ளன. இசை நாட்டியக் கலைகள் என்பன ஆன்மா இறைவனோடு இணைய வழிகாட்டுவனவாய் அமைந்துள்ளன. மேற்கூறிய அனைத்தையும் வளர்க்கும் கேந்திர நிலையமாக துர்க்கை அம்பாள் ஆலயத்தை மாற்றி அமைத்த பெருமை சிவத்தமிழ்ச்செல்வி அவர்களையே சாரும்.

பெற்றோர் இல்லாத ஆதரவற்ற அநாதை பெண் பிள்ளைகளைப் பேணிப்பாதுகாத்து வளர்க்கும் பெரும் தொண்டினை பல வருட காலமாக அம்மையார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் செய்து வருகிறார்கள். சைவப் பண்பாட்டுச் சூழலில் உருவாகும் இப்பிள்ளைகள் நாளைய சமூகத்திற்கு வழிகாட்டும் கலங்கரை விளக்குகளாகத் திகழப் போகின்றார்கள்.

சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் பெற்றிருக்கும் பட்டங்களும் பதவிகளும் பலவாகும். எதையும் அவர் தேடிப் போகவில்லை. அனைத்தும் அவரைத் தேடியே வந்தன. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வழங்கிய கலாநிதிப் பட்டம் அனைத்திற்கும் முடிவைத்தாற் போல அமைந்துள்ளது. பட்டம் என்பது ஒருவர் செய்த பணிக்கு வழங்கப்படும் சமூக அங்கீகாரமே ஆகும்.

சைவ சேனாதிபதியாகவும் சைவத்தின் காவலராகவும் விளங்கிய நாவலர் பெருமானால் ஆரம்பிக்கப்பட்ட சைவப் பிரசங்க மரபைப் பேணி வளர்த்த பெருமைக்குரியவர்களில் அம்மையார் அவர்கள் முதன்மை பெறுகின்றார். எங்களைப் போன்ற பலருக்கும் வழிகாட்டியாக இருந்த பெருமை அவரையே சாரும். மலேஷியா சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று சொற்பொழிவு ஆற்றி விட்டு அம்மையார் தாயகம் திரும்பிய பொழுது அவருடைய குல தெய்வத்தின் சந்நிதானத்திலே பெரியதொரு பாராட்டு விழா இடம்பெற்றது. துர்க்கா துரந்தரி என்ற பட்டத்தினை அடியார்கள் வழங்கிக் கௌரவித்தார்கள். தற்பொழுது கனடாவில் வசித்துப் பல சமயப்பணிகள் புரிந்து வரும் கவிஞர் கந்தவனம் அவர்கள் வழங்கிய வாழ்த்துப் பாவின் ஒரு பாடல் இவருடைய சமயப் பிரசங்கப் பணியினால் எங்களுடைய ஆலயத்தின் செயற்பாடுகளில் ஏற்பட்ட பாரிய மாற்றத்தினைத் தெளிவாக விளக்குகிறது.

**"சின்ன மேளங்கள் வேண்டாம், சிறு களியாட்டம் வேண்டாம்,**
**வண்ண வான் சிகரம் வேண்டாம், வாண வேடிக்கை வேண்டாம்,**
**மன்னு பேர் தங்கம்மாவை வரவழைத்திடுக என்பார்**
**இன்னதோர் மாற்றம் நேர எழுந்தனை வாழி வாழி!"**

தமிழ்நாடு சைவசித்தாந்த சமாஜத்தின் பவளவிழா மிகச் சிறப்பாகத் திட்டமிட்டு ஒழுங்கான முறையில் சைவ மணம் கமழும் விழாவாக துர்க்கை அம்பாள் ஆலயத்தில் அம்மையாரின் தலைமையில் நடாத்தப்பட்டது. பழ இரத்தினம் செட்டியார் சைவசித்தாந்தத்தைப் பற்றி ஆற்றிய விரிவுரையும் நமது நாட்டைச் சேர்ந்த இளைப்பாறிய ஆங்கில போதனாசிரியர் திரு. ச. விநாயகமூர்த்தி அவர்கள் ஆற்றிய திருவாசகப் பேருரையும் என்றும் நினைவில் நிற்கக் கூடியவை ஆகும்.

அம்மையாருடைய அறப்பணிகள் விரிக்கின் பெருகும். அவருடைய சிந்தனை சிவசிந்தனை, வாக்கு இறைவன் புகழ்பாடும் மணிவார்த்தை, செயல் இறையருள் வழிகாட்டச் செயற்படும் அறச்செயல்கள். திரிகரண சுத்தியோடு பணியாற்றும் அம்மையாரின் அகத்திலே நின்று அம்பிகை அவரின் செயற்பாடுகள் அனைத்திற்கும் வழிகாட்டுகின்றாள். அன்னை பராசக்தியின் அருளைத் தன் அகத்தே பெற்றுக்கொண்ட அம்மையார் அவர்கள் சைவத்தமிழ் சமூகம் முழுவதிற்கும் வழிகாட்டியாக இருக்கின்றார். நூறாண்டு காலம் நிறைவான வாழ்வு வாழ்ந்து நமது சைவத்தமிழ் உலகிற்குத் தொடர்ந்து வழிகாட்ட சிவத்தமிழ்ச்செல்வி அம்மையார் அவர்களுக்கு எல்லாம் வல்ல பார்வதி சமேத பரமேஸ்வரப்பெருமானின் திருவருள் துணைகிடைக்க வேண்டுமென்று நாம் அனைவரும் முத்து விழாக் காணும் இன்றைய திருநாளில் இறைவனைப் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை பொருந்திய சிதம்பர தரிசனம் செய்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

சிதம்பரம், இதயத்தானத்தையே குறிக்கின்றது. அங்கு ஸ்ரீ நடராஜப்பெருமான் ஆனந்தத் திருநடனம் புரிகிறார். அதனால் ஐந்தொழில்களும் சரிவர நடைபெறுகின்றன. அதன் பேறாக, உலகமும் மற்றைய அண்டங்களும் இயங்குகின்றன. ஆனி உத்தரத்தன்று ஸ்ரீ நடராஜப்பெருமானைச் சிதம்பரத்தில் தரிசிப்பது பெரும் பேறாகக் கொள்ளப்படுகிறது. கோயில் என்றால் சிதம்பரம் கோயிலையே குறிப்பதாக உள்ளது. சிதம்பரத்தைச் சிவபூமி என்று திருமூலர் அழைக்கிறார். அங்குள்ள தீர்த்தம் சிவகங்கையாகும். இந்த வகையில் மூர்த்தி, தலம், தீர்த்தச் சிறப்புக்களைக் கொண்டுள்ளது சிதம்பரம்.

சிதம்பரத்தைத் தரிசித்த மாத்திரமே முத்தி நிச்சயமாகிவிடுகிறது என்பர் ஞானியர். அடியார்கள் பலர், சிதம்பரத்தைத் தரிசித்து, ஆன்ம ஈடேற்றம் பெற்றுள்ளனர். மாணிக்கவாசகரும், நந்தனாரும் முத்தியடைந்த தலம் சிதம்பரம். தில்லை வாழந்தணர்கள் பூசை செய்து வருகின்றனர். இதுவும் சிறப்பாகும். "தில்லை வாழந்தணர்கள் அடியார்க்கும் அடியேம்" என்று சுந்தரமூர்த்தி சுவாமிகளால் போற்றப்பெற்ற பெருமை தில்லை வாழந்தணர்களுக்கு உண்டு.

பஞ்சபூதத் தலங்களுள் சிதம்பரம் ஆகாசத்திற்கு உரிய தலமாகும். சிதம்பரத்திலேயே பொன்னம்பலம் உள்ளது. அந்த அம்பலத்தில் ஆடுகின்ற தெய்வமே நடராசப்பெருமான். சிவலிங்கம் சிதம்பரத்தின் கருவறையில் உண்டு. அவர் சிவகாமசுந்தரி சமேதராகக் காட்சியளிக்கிறார்.

சிதம்பரத்தை இதயத்தானம் என்கின்றனர். நடராசப்பெருமானின் விமானம் இயதவடிவிலேயே அமைக்கப்பட்டுள்ளது. இதயமாகிய உள்ளத்திலேயே பிராணன் தோன்றும். பிராணன் பொன்னிறமானது என்பர். விமானமும் பொன்னால் வேயப்பட்டுள்ளது. பொன்னம்பலம் என்ற பெயரையும் பெறுகிறது.

நடராசப் பெருமான், சிவமும் சக்தியும் இணைந்த சொரூபமாகும். அர்த்தநாரீஸ்வர வடிவமென்றும் கூறலாம். வலப்பாகம் சிவம்; இடப்பாகம் சிவசக்தி. இந்த வகையில் நடராஜப்பெருமானை, சிவகாமி இல்லாமலும் வழிபடலாம்.

சிவகாமசுந்தரி, நடராஜருக்கு அயலில் நிற்பதாக காணப்படுகின்றார். நடராசரை, சிவகாமிஅம்மை மூலம் வணங்கவேண்டுமென்பது மரபு. சிவகாமி அம்மையார் சீவான்மாவின் தூயவடிவம். சிவசக்தி இணைந்த திருநடனத்தைக் காணும் ஆன்மா, சக்தி வடிவம் பெறுகிறது. அதனால் தான் சிவகாமி என்றே பெயர் வந்தது.

"சிதம்பர ரகசியம்" என்பது இங்குள்ளது. ஓங்காரமாய் உள்ள பீடத்தில் சதாசிவமான பரம்பொருளே இருக்கும் என்பது, இரகசியம் என்னும் வில்வமாலை தொங்கும் காட்சியையும், நடராசரையும், சிவகாமியையும் உணரும் போது இதன் உண்மை புலனாகும்.

சிதம்பரம் தரிசனம் செய்ய வருவோர் பிராணாயாமம் செய்து, சிவாயநம என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதி, இதயத்தின் மையப் பகுதியை உற்றுநோக்கி வழிபட வேண்டும், என்று கூறப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருப்பள்ளியெழுச்சிப் பூசையையும் அர்த்த யாமப் பூசையையும் இக்கோயிலில் காணத் தவறக் கூடாது என்றும் அறிஞர் கூறுவர்.

எல்லாக் கோயிலும், சிதம்பரத்தில் நடராசர் கோயிலில் நடு இரவில் அதாவது அர்த்தயாமத்தில் ஒடுங்கும் என்பர். நடராசருக்குத் திருப்பள்ளியெழுச்சி நடக்கும் அதிகாலையில்தான் பிறகோயில் மூர்த்தங்களுக்குச் சக்தி உண்டாகும் என்றும் சொல்லப்படுகிறது.

நடராசருக்குள்ள திருவாசி, ஓங்காரமாகவும், அது பிரபஞ்சம் முழுவதையும் குறிப்பதாகவும் உள்ளது.

இறைவன் சிவசக்தியாக நின்றே எல்லாப் பொருள்களையும் படைத்துள்ளான். அப்பொருள்கள் இயக்கும் பொருட்டு ஆடுகின்ற சிவானந்தத் திருக்கூத்தே, சிதம்பரக் கூத்தாகும்.

ஊன நடனம், ஞானநடனம் என இருவகை நடனங்கள் சிதம்பரத்தில் நிகழ்கின்றன. பிரபஞ்சம் முழுவதையும் இயங்கச் செய்வது ஊன நடனம். அதுவே திருவாசியாக உள்ளது. அப்பிரபஞ்சத்தில் எல்லாவற்றையும் இருந்த படியே இயக்கும் திருவருள் இயக்கம் ஞான நடனம் அதுவே, நடராசர் திருக்கூத்தாகும். இரண்டும் ஒன்றையொன்று பிரியாமல் இயைந்தும் உள்ளமை உணரப்பட வேண்டியது. தைப்பூச நன்நாளில் ஸ்ரீ நடராஜப்பெருமானை வழிபட்டு உய்வு பெறுவோமாக.

# அன்பே உலகம்

உலகிடம் அன்பு செலுத்தவே மனிதப் பிறவி கிடைத்துள்ளது. இப் பிறவியில் அன்பில்லையேல் விலங்கு முதலிய கீழ்ப் பிறப்பே கிடைக்குமென்பதும் குறிப்பாகிறது.

உலகையெல்லாம் ஒன்றெனத் தழுவும் நட்பினை அன்பே அளிக்கும். அன்பு 'முல்லை'யாயின் ஆர்வம் மணம் ஆகும். தான் நாடாமல் வரும் நட்பு கோப்பெருஞ் சோழன் பிசிராந்தையார் நட்பு ஆகும். திருவள்ளுவர் பகரும் 'நாடாச்சிறப்பு' - தேடாமலே பிறர் உணர்ச்சியொத்து அவரே நாடவந்து செய்யும் நட்பு. பிசிராந்தையார் நட்பு; வரலாற்று ஏடுகளில் இச்செயல் உலக ஒற்றுமையைக் குறித்ததாகும்.

செல்வத்தால் 'இன்பம்' கிடைக்கலாம். ஆனால் அன்பின்றிப் புகழ்; புகழோடு கூடிய இன்பம் கிடையாதென்பதாகும். 'யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்' என்பதே அன்பு. அகத்திற்குரிய அன்பு அறத்திற்கே யாம்; புறத்திணைக்குரிய மறத்திற்கும் (வீரப்போர்) அதுவே காரணமாகும்.

இல்லறம், துறவறத்திற்கேயன்றி அரசனது மறத்திற்கும் காரணமாகின்றது. மறத்தன்மையுடைய காட்டு வாசிகளிடையேயும் உள்ள அன்பினை எண்ணலாம்.

இவ்வுலக இன்பம் தூய அன்பு ஒன்றினால் தான் கிடைக்குமென்று உணர்ந்து வாழ்வதே வாழ்க்கை.

**முனைவர் துரை. லோகநாதன்,**
கா.சு.சு.கலைக்கல்லூரி, பனசை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பழைத மாற்றும் பண்பு

**க. சிவசங்கரநாதன்**
சமாதான நீதிபதி
சரசாலை.

**சி**வம் விஷ்ணு பிரம்மா ஆகிய மூன்றும் கலந்தது பரப்பிரம்ம ஸ்வரூபம் அதனை யாம் நினைக்காவிட்டாலும் ஜீவராசிகளைக் காப்பதற்கு இராமனாகவும், கிருஷ்ணனாகவும், முருகனாகவும் வருகிறது.

"**வாவின் றிழிந்துவரம்பிகந்த மாபூதத்தின் வைப்பு**"
என்றார் கம்பர். இராமனை அவ்வாறு வந்த பிரம்மத்தின் கருணை ஸ்வரூபம் ஜீவராசிகளின் ஊணிலும் உயிரிலும் கலந்து நிற்கிறதாம் எப்படி?

குடத்தைக் கடலில் போட்டு விட்டால் குடத்திற்குள் கடலும் கடலுக்குள் குடமும் அடங்கியிருக்கிறது அதுபோல் சரீரமாகிய குடத்திற்குள் பிரம்மம் இருக்கிறது. பிரம்மத்திற்குள் நாமிருக்கிறோம் எல்லா ஜீவராசிகளையும் தன்கருணைக்குள் வைத்து காப்பாற்றுகிறான் பகவான் அவனது கருணையைவிட்டு ஒரு ஜீவனும் விலகியதில்லை. ஆனால் ஜீவராசிகள் தான் பகவானை நினையாமல் நஷ்டமடைகின்றன. ஆதலால் இறைவனுக்குத் தெரியாமல் நாம் எந்த காரியத்தையும் செய்ய முடியாது. நாம் பஜனை செய்வதும் பிழை செய்வதும் நன்றாக அவனுக்குத் தெரியும்.

"**குறவர் குடிசை நுழைந்தாண்டி அந்தக்**
**கோமாட்டி எச்சில் விழைந்தாண்டி**" என்றார் வள்ளலார்.

குற்றமும் குணமும் கலந்த ஜீவராசிகளே குறவர் அத்தகைய குறவர் குடியிருக்கும் குடிசையே மானிட சரீரம் அச்சரீரமாகிய குறவர் குடிசையில் புகுந்து அதிலுள்ள குற்றங்களை நீக்கிப் புனிதமாக்கி விட்டானாம் முருகன்.

இந்தச் சரீரத்தைக் கொடுத்திருக்கிறாய் இது உடையும் தன்மையுள்ள உடம்பாயிற்றே இது உடைந்து விட்டால் என்ன செய்வேன். பிறகு உன்னைப் பார்க்க முடியாதே நீ என்றுமிருப்பவன் உனக்குக் காலம் கிடையாது நானோ காலத்துக்குள் அகப்பட்டிருக்கின்றேன் அந்தக் காலம் முடிவதற்குள் காலாநீதப் பொருளான நீ வந்து ஆட்கொள்ளவேண்டும் ஆதலால் நீ ஓடிவர வேண்டும் தாமதிக்கலாகாது என்றார் அருணகிரியார்.

கர்ணன் செஞ்சோற்றுக்கடன் கழித்துவிட்டேன் அது முடிந்து விட்டது உன்னுடன் கலந்தேன் என்றான்.

கற்பில் சிறந்த உத்தமியாகிய மண்டோதரி இராவணனுக்காக செஞ்சோற்றுக்கடன் கழித்து விட்டாள். இராவணனுடைய சடலத்தை தேடிப் போகும்பொழுது அங்கு காத்து நின்ற ஸ்ரீ இராமனிடத்தில் நாராயண ஸ்வரூபத்தைக் கண்டாள். அஞ்சலி செய்தாள். அஞ்சலி செய்வோர்கள் நேயக்காரனல்லவா அவன் இராமனைப் பார்க்கும் பொழுது அவனுடன் அவன் இதயத்திலிருக்கும் சீதாலட்சுமியையும் கண்டாள்

"**ஆரா அமுதாய் அலைகடலில் கண்வளரும்**
**நாராயணனென் றிருப்பேன் இராமனை யான்**" என்று அவள் கண்ட காட்சியை கம்பர் பாடியிருக்கிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிக்கு மரணகாலத்தில் தன் நாராயண ஸ்வரூபத்தைக் காட்டினானாம் இராமன். இராமனது அம்பால் அடிபட்ட வாலி முதலில் இராமனைப் பார்த்து நீ தசரதபுத்திரனாகிய இராமனா? இல்லவேயில்லை சீதாதேவியை பிரிந்ததால் உன் இதயத்திலுள்ள இரக்கம் வற்றி அரக்கனாய் விட்டாய் போலும். நானும் தம்பியும் சண்டையிட்டால் உனக்கென்ன? நீ மறைந்திருந்து என்னையடித்து தர்மத்தையே குலைத்து விட்டாய் என்று நிந்தித்தான். இராகவன் வாலியின் வசை மொழிகளனைத் தையும் வாங்கிக் கொண்டான். இவன் என் ஸ்வரூபத்தையறியாமையினாலன்றோ மனிதரூபமாக நினைத்து மனித தருமங்களை என்மேலேற்றிக் குற்றம் கூறுகிறான் என்ற கருணை இராமனுக்கு வந்துவிட்டது. வாலியின் அகக்கண்ணை திறந்து தன் நாராயண ஸ்வரூபத்தைக் காட்டினான். அவமிகமகிழ்ந்து அவனைத் துதித்து அவனுக்குள் கலந்து விட்டான் வாலி. சடமாகிய தன் சடலத்தைக் கீழே உதறியெறிந்தான் எத்தனை பாவம் செய்தாலும் சாவதற்கு முன் பகவானடைய ஸ்வரூபத்தைக் கண்டுவிட்டால் போதும். அவன் பாவம் நீங்கிப் புனிதனாகிவிடுகிறான். இராமா இராமாவென்று பக்தி செய்து கொண்டிருப்பவர்களுக்கு அந்தப் பக்தியே இராமச்சந்திரமூர்த்தியாய் வருகிறது. கிருஷ்ணாவென்றவர்களுக்குக் கிருஷ்ணரூபமாகத் தோன்றுகிறது. முருகாவென்றவர்களுக்கு அந்தப் பக்தியின் ரூபம் ஆறுமுகமாய் வரும் அந்த ரூபத்தை கண்டுவிட்டால் நாளென் செயும் வினைதானென் செயும் எனைநாடி வந்த கோளேன் செயும் கொடும் கூற்றென் செயும் என்றார் அருணகிரியார்.

நாள் செய்யாமலிருக்காது நாள் என்பது காலம் காலத்திற்குள் இருப்பவருக்கு காலம் செய்யவேண்டியதைச் செய்துதான் தீரும். அதற்காக காலத்தைக் கடந்து நிற்கவேண்டும் காலத்திற்குள் இருப்பது சரீரம் அதைக்கொண்டு காலத்தைக் கடந்து நிற்பதெப்படி?

குமரேசர் இரு தாளும் சிலம்பும் சதங்கைகளையும் தண்டையும் ஷண்முகமும் தோளும் கடம்பும் எனக்கு முன்னே வந்து தோன்றிடினே நாளென் செயும் வினைதான் என்செயும் என்றார் அருணகிரியார்.

குமரேசருடைய தண்டைக்காலை நினைத்துப் பாடினால் காலத்தைக் கடக்கலாம். வள்ளலார் சம்பந்தர் மாணிக்கவாசகர் முதலியவர்கள் பக்தியுடன் பாடிக் காலத்தைக் கடந்தனர் அவர்கள் சரீரத்துடனேயே ஜோதியாகிய காலதீதப் பொருளுடன் கலந்தனர். அவ்வாறு காலத்தைக் கடக்க முடியாதவர் சரீரத்தைக் கீழே தள்ளிவிட்டு காலாதீதப்பொருளுடன் கலந்துநிற்பர்.

வள்ளிக்கு வாய்த்தவன் முருகப்பெருமான் முருகுநாமம் சொல்பவரெல்லாம் வள்ளியாய் விடுகின்றனர். முதலில் கருமையாயிருந்த உள்ளம் வெண்மையாய் ஜோதியாய் விடுகிறது. முருகன் மயில்வாகனாரூடனாய் வந்து விடுகிறான். திருச்செங்கோட்டில் தன் மோகன ரூபத்தைக்காட்டி அருணகிரியாரை ஆட்கொண்டான் முருகன் திருச்செங்கோடு என்பது சுஷவம்னாஸ்தானம் அங்கு முருகனை நினைப்பவர்களுக்கு அவன் வெகு எளிதில் காட்சி தருகிறான். மேலும் முருகப்பெருமான் பற்றி அறிய கந்தபுராணத்தை முழுமையாக படித்தால் நன்கு அறியலாம். யாழ்ப்பாணம் என்றால் கந்தபுராண கலாசாரம் எனக்கூறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து

# சத்தியம் காக்கும் சக்தி

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வாழ்த்து!

2004ஆம் ஆண்டு நிறைவடைந்து விட்டது. கடந்த காலத்தையும் நினைத்துப் பார்ப்போம். விட்ட பிழைகளைத் திருத்திக் கொள்ளுவோம். வருங்காலத்தில் நேர்மையுடனும் நெஞ்சுறுதியோடும் வாழ்வோம். 'நேர்மை' என்றதும் எனக்கு ஒரு கதை வருகிறது.

தமிழ்நாட்டிலே திருஆமாத்தூர் என்ற ஒரு ஊர் இருக்கிறது. அந்த ஊரில் உள்ள சிவன்கோயிலில் அம்மன் சந்நிதியும் இருக்கிறது. அந்த அம்மன் சந்நிதிக்குப் பக்கத்தில் முத்தாம்பிகை என்று இன்னுமொரு அம்மன் சந்நிதியும் இருக்கின்றது. அந்த அம்மனை வட்டப்பாறை அம்மன் என்றும் சொல்லுவார்கள். அந்த ஊரில் உள்ளவர்கள் தங்களுக்குள் எதாவது வழக்கு என்றால் இந்த அம்மன் சந்நிதியில் போய் வட்டவடிவமான கல் உருவில் இருக்கும் இந்த அம்மனைத் தொட்டுச் சத்தியம் செய்து தாங்கள் சொல்வது உண்மை என்பதை நிரூபிக்க வேண்டும். அப்படி செய்கிறவர்கள் பொய்ச் சத்தியம் செய்தால் அந்த அம்பாள் தண்டிப்பாள் என்ற நம்பிக்கை எல்லோர் இடத்திலும் இருந்தது.

சில காலத்திற்கு முன்பு ஆமாத்தூருக்கு பக்கத்து ஊரில் ஒரு நல்ல மனிதர் வாழ்ந்தார். அவருக்கு இரண்டு புதல்வர்கள். மூத்தவன் தகப்பனாருக்கு செல்லப்பிள்ளையாக ஊரிலே தங்கியிருந்தான். இளையவன் தூரத்தில் உள்ள ஊரில் படித்து அங்கேயே வேலையாய் இருந்தான். ஒரு நாள் தகப்பனார் இறந்து போனார். இளையவனும் ஊருக்கு வந்து அண்ணனுடன் சேர்ந்து தகப்பனாருக்குச் செய்யவேண்டிய இறுதிக்கடமைகளைச் செய்து முடித்தான். சில நாள் கழிந்தபின் தகப்பனாருடைய சொத்துக்களில் தனக்குரிய பங்கைத் தரும்படி அண்ணனிடம் தம்பி கேட்டான். அண்ணனோ அப்படி ஒரு சொத்தும் கிடையாது என்றும், தகப்பனார் சொத்துக்கள் எதுவும் வைத்துவிட்டு போகவில்லையென்றும் சாதித்தான். தம்பி, ஊர்ப்பஞ்சாயத்தில் முறையிட்டான். அண்ணன் முரடன் என்பதும் அடாவடிக்காரன் என்பதும் ஊராருக்குத் தெரியும். அதனால் அவனுக்குப் பயந்து பஞ்சாயத்தில் சாட்சி சொல்ல எவரும் வரவில்லை. வழக்கை விசாரிக்க முடியாத பஞ்சாயத்தார் வட்டப் பாறை அம்மனிடம் போய் சத்தியம் செய்து வழக்கை தீர்த்துக் கொள்ளும்படி சகோதரர்கள் இருவருக்கும் சொன்னார்கள். ஒரு சில நாள் கழித்தபின் இரண்டுபேரும் ஆமாத்தூருக்குப் போனார்கள். வேறு சிலரும் சேர்ந்து போனார்கள். கோயிலுக்குள் போனதும் அண்ணன் தன் கையில் இருந்த ஒரு பெரிய தடியை தம்பியிடம் கொடுத்துவிட்டு வட்டப்பாறை அம்மனை கையாற் தொட்டு, "தகப்பனாரின் சொத்து எதுவும் இப்போது என்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லை'' என்று சத்தியம் செய்தான். எல்லோரும் கோயிலை விட்டு வெளியே வந்தனர். ஊரை நோக்கி நடந்தார்கள். தம்பியிடம் கொடுத்த தடியை அண்ணன் வாங்கிக் கொண்டான். சிறிது தூரம் சென்றதும் பாதைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு கல் வெடித்தது. அதற்குள் இருந்து நாகபாம்பு ஒன்று சீறிப்படம் எடுத்து பாய்ந்து அண்ணனை கொத்தியது. அவன் அலறிக்கொண்டு வீழ்ந்தான். அவன் கையில் இருந்த தடியும் கீழே விழுந்து இரண்டாய் முறிந்தது. அதற்குள் இருந்து தங்கப்பவுண்கள் வரிசை வரிசையாக வெளியே சிதறி விழுந்து உருண்டு ஓடின. அண்ணன் தம்பியைப் பார்த்து கைகூப்பி வணங்கியபடி கதறி அழுதான். ''தம்பி! அப்பாவின் சொத்துக்களை விற்று தங்கமாக்கி இந்த தடிக்குள் ஒளித்து வைத்திருந்தேன். உன்னை ஏமாற்ற நினைத்தேன். பொய்ச்சத்தியம் பண்ணினேன். வட்டப்பாறை அம்மன் தண்டித்துவிட்டாள். என்னை மன்னித்து விடு'' என்று அழுது அழுது இறந்தான். ஊராரும் உற்றாரும் தெய்வ நியதியை நேரில்கண்டு பயபக்தியுடன் கும்பிட்டார்கள்.

அந்தக் கோயிலும் அந்த அம்மனும் இன்றும் திரு ஆமாத்தூரில் உள்ளன. இன்றும் அங்கே நீதி தழைக்க வட்டப்பாறை அம்மன் வடிவில் திருவருள் துலங்குகிறது. அதுமட்டுமல்ல எங்கும் நீக்கமற நிறைந்தவள் பராசக்தி! அவள் நம்மை எப்போதும் பார்த்துக்கொண்டே இருக்கிறாள். எனவே; நேர்மையைக் கடைப்பிடித்து நல்லவராய் வாழ்வோம் வல்ல பராசக்தி நம்மைக் காப்பாற்றுவாள்.



## வாழ்த்துகிறோம்

''அருள்ஒளி'' உங்கள் கரங்களில் தவழ்ந்த நாள் முதல் இன்று வரை சிறுவர் விருந்து என்னும் பகுதியூடாக உங்களை மகிழ்வித்து வரும் ''சிஸ்ரர் அம்மா'' என அன்பாக அழைக்கப்படும் அருட்சகோதரி யதீஸ்வரி அவர்கள் அண்மையில் தென்னிந்திய வட இந்திய புனித தலங்களுக்கான யாத்திரையை மேற்கொண்டு தாயகம் திரும்பியுள்ளார். அவர் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ்ந்து அருள்ஒளியில் தனது ஆக்கங்களைத் தொடர்ந்து தரவேண்டும் என்று அருள்ஒளி வாசகர்களோடு நாமும் வாழ்த்துகிறோம்.

- ஆசிரியர்.

## ''அருள்ஒளி'' வாசகர்களுக்கு ஓர் அன்பான வேண்டுகோள்

''அருள்ஒளி'' மாதம் தோறும் வெளிவந்து கொண்டு இருக்கிறது. இம்மலருக்கு பொருத்தமான, தரமான ஆக்கங்களை நாம் எதிர்பார்க்கிறோம். நீங்கள் எங்களுக்கு அனுப்பவேண்டிய முகவரி

ஆசிரியர்
''அருள்ஒளி''
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஆசிரியர்
''அருள்ஒளி''
திருமகள் அழுத்தகம்,
சுன்னாகம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தபுராண சிறுவர் அமுதம்

- மாதாஜி

## 63. சக்கரவாளகிரி

அவுணர் சேனைகளை இழந்த சூரபன்மன் ஆற்றொணாத் துயரம் கொண்டான். அப்பொழுது "அம்மா" என்று தாயை அழைத்தான். உடனே அவனது தாயாகிய மாயாதேவி வந்தாள்.

"தாயே போரில் படைகளையும் உறவினரையும் இழந்து தன்னந்தனியனாக இருக்கின்றேன். நீதான் துணைபுரிய வேண்டுமென" சூரபன்மன் தாயை வேண்டினான்.

"மகனே எல்லாரும் அழிந்து நீ தனிமரமாய் நிற்கின்றாய். இப்போதும் கூட மனம் தெளிவுபெறாது இருக்கின்றாய். இத்தனை அழிவுக்கு காரணம் தேவர்களைச் சிறைவைத்தமையாகும். தேவர்களை சிறையில் இருந்து விடுதலை செய்தால் முழுமுதற் பொருளாகிய முருகப்பெருமான் மனம் மகிழ்ந்து போரை நிறுத்திவிடுவான். முருகப்பெருமானைப் பாலனென எண்ணிவிட வேண்டாமென" மாயை புத்திமதி கூறினாள்.

சூரபன்மன் தனது தாயின் அறிவுரையை மறுத்தான். அம்மா நீ எனக்கு உபதேசம் செய்ய வேண்டியதில்லை உதவிதான் செய்ய வேண்டும். உதவப் போகிறாயா? இல்லையா? என்று சினந்தான். என்ன உதவி வேண்டுமென மாயை கேட்டாள். இறந்தவர்கள் எழும்ப வேண்டுமெனச் சூரபன்மன் கூறினான்.

மாயை "மகனே ஏழு கடல்களுக்கப்பால் அமுதசீத மந்திரகூடம் என்ற ஒருமலை இருக்கின்றது. அதனை இங்கே கொண்டு வந்தால் இறந்தவர்கள் எல்லோரும் உயிர்பெறுவார்கள்" எனக்கூறி விட்டு மறைந்தாள்.

உடனே சூரபன்மன் இந்திரஞாலத்தேரை அனுப்பி ஏழு கடல்களுக்கப்பால் இருந்த அமுதசீத மந்திரமலையை எடுத்துவரும்படி பணித்தான். அது விரைவாய்ச் சென்று அந்த மலையை எடுத்து வந்தது. அமுதசீத மந்திரமலை வந்ததும் இறந்த அவுணப்படைகள் யாவும் உயிர்பெற்றன.

சூரபன்மன் மகிழ்ச்சியடைந்தான். தனக்கு யாரும் இணையில்லையென்று இறுமாந்தான். பூதப்படைகள் பயந்து சோர்ந்தன. முருகப்பெருமான் சிவபெருமானால் அருளப்பட்ட சர்வசங்கார அஸ்திரத்தால் இறந்து எழுந்த அவுணப்படைகளை மீண்டும் அழித்தார். சூரபன்மன் தனியானான்.

பின்னர் சூரபன்மன் தனது இந்திரஞாலத்தேரை அழைத்தான். வீரவாகுதேவர் முதலாக எல்லாப் பூதப்படைகளையும் நீ கவர்ந்து சென்று அண்டகோளகையின் அடைத்து வைத்திரு என்று கட்டளையிட்டான். இந்திரஞாலத்தேர் அவ்வாறு செய்தது. முருகப்பெருமான் தனியன் ஆனார். சூரபன்மனின் தந்திரத்தை முருகப்பெருமான் உணர்ந்தார். தனது கொற்றவாளை ஏவி, இந்திரஞாலத்தேரின் வலிமையைக் கெடுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரஞாலத்தேருடன் பூதப்படைகள் வீரவாகுதேவரையும் கொண்டுவரும்படி பணித்தார். அவ்வாறே வேற்படை செய்தது. இந்திரஞாலத்தேரை சூரனிடம் திரும்பிச் செல்ல விடாது முருகப்பெருமான் தடுத்தார். பின்னர் முருகப்பெருமானும் சூரனும் ஊழித்தீபோல் போர் செய்தனர். சூரபன்மனின் சூலப்படையும் சிங்கமும் அழிந்தன.

இதனைக்கண்ட சூரபன்மன் ஊழித்தீபோல் வெகுண்டான். மாயத்தினால் ஒரு பெரிய சக்கரவாகப் பறவையாகி ஆகாயத்தில் பறந்தான். சூரிய ஒளியை மறைத்து எங்கும் இருளாக்கினான். பூதப்படைகளை அலகினால் கொத்திச் சிறகினால் அடித்தான். இதனைக்கண்ட இந்திரன் மயில் வடிவாகிச் சென்று சக்கரவாகப் பறவையுடன் மோதினான். பின்னர் முருகுப்பெருமான் ஆயிரம் கோடி பாணங்களை ஏவி சூரபன்மனின் மாயங்களை அழித்துவிட்டார்.

சூரபன்மன் பெருங்கோபத்துடன் போர்க்களம் வந்தான். முருகப்பெருமான் அவனை நோக்கி "அறிவிலியே! அழியும் மின்னலைப்போல் நீ எடுத்த மாய வேடங்களை நாம் அழித்து விட்டோம். அழியாத நமது பெரிய வடிவத்தைப் பார்" என அருளி அவனுக்கு ஞானக்கண்ணையும் அருளினார்.

முருகப்பெருமானின் விசுவரூப வடிவம் ஆயிரம் கோடி சூரியப் பிரகாசத்தை விட விஞ்சியதாகக் காணப்பட்டது. சுவாமியின் விசுவரூபத்தில் அகில அண்டங்கள், உயிரினங்கள், மலைகள், கடல்கள், ஆறுகள் போன்ற எல்லாம் அடங்கிக் காணப்பட்டது. முருகப்பெருமானின் பெருமையைச் சூரபன்மன் வாயிலாக கச்சியப்ப சுவாமிகள்

"கோலமா மஞ்ஞை தன்னில் குலவிய முருகன் தன்னைப்
பாலன் என்றிருந்தேன் அந்நாள் பரிசிவை உணர்ந்திடலேனால்
மாலயன் தனக்கும் ஏனைவானவர் தமக்கும் யார்க்கும்
மூலகா ரணமாய் நின்றமூர்த்தி இம்மூர்த்தி யன்றோ"

என்று பாடுகின்றார். அந்த நாளில் முருகன் பாலன் அல்லன் என இரணியன் சிங்கமுகாசுரன் சொன்னது உண்மையேயாகும். மீண்டும் முருகப்பெருமானின் அழகிய கோலத்தைச் சூரபன்மன் வாயிலாக கச்சியப்பசுவாமிகள்

"ஆயிரம் கோடிகாமர் அழகெலாந் திரண்டொன் றாகி
மேயின எனினும் செவ்வேள் விமலமாஞ் சரணந் தன்னில்
தூய எழிலுக்காற்ற தென்றிடில் இணைய தொல்லோன்
மாயிரு வடிவிற்கெலாம் உவமையார் உருக்க வல்லார்"

எனச் செந்தமிழ்த்தேன் பாயப் பாடுகின்றார்.

சூரபன்மன் விம்மித மடைந்தான். இந்த விசுவரூபத் தரிசனத்தை கோடிக்கணக்கான யுகங்கள் தோறும் பார்த்தாலும் மனமடங்காது இந்தப் பேருவத் தர்சனம் கண்ட அசுரன் முருகப்பெருமானிடம் சரணாகதியடையாது வீரலட்சணத்துடன் போர்செய்து சரணாகதிப் பேற்றை அடைந்த நிகழ்ச்சியைப் பின்பு பார்ப்போம்.

கந்தப்பெருமானை இருகைகூப்பி வணங்க நினைந்தான் சூரபன்மன். அவனுடைய மனம் வணங்கியது. ஆனால் அவனுடைய மானம் வணங்க மறுத்தது. இதனைச் சூரபன்மன் வாயிலாக கச்சியப்பசுவாமிகள்

சூழுதல் வேண்டும் தாள்கள் தொழுதிடல் வேண்டும்
தாழுதல் வேண்டும் சென்னி துதிந்திடல் வேண்டும் தனது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆழுதல் வேண்டும் தீமை அகன்றுநான் இவற்குஆளாகி
வாழுதல் வேண்டும் நெஞ்சம் தடுத்தது மானம் ஒன்றே.

தன் மானத்தை இழந்து விட்டால் ஏற்படும் விளைவு ஏழு ஏழு பிறப்புக்கும் தொடர்ந்து வரும் அதனால் "நான் மானம் இழந்து வாழமாட்டேன்" என்று முன்பு அறிவுரை கூறிய இரணியனிடம் கூறினான். அந்தத் தன்மானம் இப்போதும் முருகப்பெருமானுடன் போர்செய்யத் தூண்டியது.

- தொடரும்

# அருள் விருந்து

விவேகம் இல்லாதவன் குருடன் போன்றவன்.
தூய அன்பு ஊதியம் எதையும் எதிர் பார்ப்பதில்லை.
சிந்தை,
சொல்,
செயல்
ஆகிய மூன்றும் ஒத்திருக்கட்டும்.
ஆசை இருக்கும் வரையில் மனிதனுக்கு அல்லல்களும் உண்டு.
நல்ல மனமே மனிதனுக்கு என்றென்றும் துணைபுரியும் தோழனாயிருக்கிறது.
அண்டத்தில் உள்ளதெல்லாம் பிண்டம் என்னும் நமது உடலிலும் இருக்கிறது.
அகண்டமாயுள்ள காலம் என்னும் மேகத்தினுள் வாழ்வு என்னும் மின்னல் தோன்றி மறைகிறது.
மனிதன் செல்வத்துக்குச் சொந்தக்காரன் அல்லன்; அதற்கு அவன் வெறும் காப்பாளனே ஆகிறான்.
வெளிச்சம் வரும்போது இருள் மறைகிறது. அன்பு ஓங்கும் பொழுது அச்சம் அகன்று விடுகிறது.
வாழ்வும் காலமும் கிடைப்பதற்கு அரிய வாய்ப்புக்களாம் இரண்டையும் நன்கு பயன்படுத்த வேண்டும்.
நிலைத்த சுகத்தை இந்நிலவுலகில் நாடுபவன் நிழலானது உயிர்படைத்திருக்கிறதென்று நினைப்பவனுக்கு ஒப்பாகிறான்.
உடல் அழகு தோலில் மட்டும் இருக்கிறது ஒழுக்கத்தின் அழகோ வாழ்வு முழுதிலும் பொலிந்து கொண்டிருக்கிறது.
அழுகிப்போன பழம் ஒன்று கூடையில் உள்ள நல்ல பழங்களையும் கெடுத்து விடுகிறது. குணக்கேடன் குணவான்களையும் கெடுத்து விடுகிறான்.

(தர்மசக்கரம்; சக்கரம் 8: விகாரி வைகாசி ; ஆரம்: 5; அருள் விருந்து; பக்கம்: 162; 1959ஆம் ஆண்டு; ஆசிரியர்: சுவாமி சித்பவானந்தர்; ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் (ராடகிருஷ்ணமிஷன்); திருப்பராய்த்துறை - போஸ்ட்; திருச்சி ஜில்லா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வட அமெரிக்காவில் நாவலருக்குச் சிலையும் தரிசனமும்

பேரறிஞர் ஆழ்கடலான்
முருகவே பரமநாதன் அவர்கள்

அல்லிக்கமலத்து அயனும் மாலும்
அல்லாதவரும் அமரர் கோனும்
சொல்லிப் பரவும் நாமத்தானைச்
சொல்லும் பொருளும் இறந்த சுடரை
நெல்லிக் கனியைத் தேனைப்பாலை
நிறையின் அமுதை அமுதின் சுவையைப்
புல்லிப் புணர்வ தென்றுகொல்லோஎன்
பொல்லா மணியைப் புணர்ந்தே!

திருவாசகம் புணர்ச்சிப்பத்து-4

சைவசமயம் என்ற கூடாரத்துள் இந்துமதம் என்ற ஒட்டகம் நுழையாத காலம் அது; சிவப்பிராமணர்கள் சைவத்தைப் பேணிப்பாதுகாத்துப் புரந்தவேளை மறந்தும் புறந்தொழா செத்துப் பிறக்கும் சிறுதெய்வ வணக்கம் புகாத காலகட்டம் தொன்மையான சைவசமயிகளாய் ஈழத்தமிழர் வாழ்ந்து காட்டியவேளை; வெளிநாட்டு வெள்ளையர் புகுந்து ஆலயங்களை இடித்து கிறீத்தவ ஆலயங்கள் அமைத்தனர். ஆட்சிபீடத்தைச் சுவீகரித்து சைவர்கட்கு ஆசைகாட்டித் தம் கிறீத்தவத்தைப் பரப்பினர். சோறுக்கும், தூசுக்கும், காசுக்குமாசை காட்டிச் சமய மாற்றம் செய்தனர். போர்த்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் இப்பணியைச் செவ்வனே செய்தனர். அந்த மதம் பரப்பல் இன்றும் தொடர்கின்றது. இப்படியான சைவசமய வீழ்ச்சி ஈழமண்ணில் நிகழ்ந்தபோது பரசமய கோளரியாய் அவதாரம் செய்தவர்தான் ஆறுமுகநாவலர் அவர்கள். உலோகாயத மென்னும் சண்டமாருதத்தை எதிர்த்து உறுதியுடன் தீவிர நடபடிக்கை எடுத்தவர் இவர். தனியொருவராய் நின்று தன் மொழியையும், சமயத்தையும் சமுதாயத்தையும் வீறுகொண்ட நெஞ்சுடன் போராடி வெற்றிகண்ட வெற்றித்திருமகன்தான் ஆறுமுகம். வேறுமுகம் கொண்ட சமயிகளை வென்ற சுவம்சகோளரி ஞானசம்பந்தர் அப்பர் இருவரும் சமணம் பௌத்தம் இரண்டையும் தீவிரதரத்துடன் எதிர்த்துப் போராடி வெற்றிவாகை சூடியதுபோல், இவரும் கிறீத்தவத்தை போதகர்களை, பூஜ்ஜியர்களை எதிர்த்தும் போராடி காரியம் சாதித்த ஒரு கர்மவீரர். சாதனையாளர். கண்டனத்தில் வெகுகெட்டி. கண்டனக்கலையால் பிறமதம் தலையெடுக்க விடாமற் தடுத்த செயல்வீரர். அவர்காலம் சைவத்தின் பொற்காலம். திருமுறை, புராணம், இதிகாசம், சாத்திரம், தத்துவம் தெரிய வைத்த தெய்வப்பிரமுகர் இவர். முதன் நாவலரும் இவரே. அவர் வாழ்ந்த காலகட்டத்தில் ஒரு பிராமணோத்தமர் வந்து ஐயா நான் மூவர் தேவாரங்களையும் பெற்று விட்டேன். எனக்கு மாணிக்கவாசகர் அருளிய தேவாரம் வேண்டும் என்றார். தேவாரம் எது திருவாசகமெது என்றே தெரியாத காலம் அது. அதைத் தெரியவைத்து பிராமணர் களையும் வழிப்படுத்தியவர் நாவலர் பெருமான். நம்நாட்டில் மட்டுமன்றி தென்தமிழ் நாட்டிலும் சைவத்தையும் தமிழையும் அழியாமற் காத்த கெட்டியான உளம் படைத்த தவப்புதல்வர் நாவலர். பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்த முத்துக் குமாரக் கவிராயர் அன்றைய மதமாற்ற நிலையைப் பாட்டிலே வடித்து ஓராவணமாகத் தந்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்வழி காட்டுவோம்
உடுபுடைவை சம்பளம்
நானாநாளுந்தருகு வோம்
நாம் சொல்வதைக் கேளும்
என மருட்டிச் சேர்த்து
(ஸ்)நானமுஞ் செய்துவிட்டால்
மெல்ல மெல்லப் பின்னை
வேலையிங் கில்லைநீா்
வீட்டினிடைபோ மென்கின்றாா்
வேண்டியொரு கன்னியைத்
கைக் கொண்டு கருவாக்கி
விட்டபின் கணவன் வேலை
இல்லை நீ போவென்று
தள்ளுவது போலுமே
இனி எம்மை எம் உறவினோா்
எப்படியும் பாராா்கள்
கிட்டவும் வாராா்கள்
ஏா் பூட்டி உழவு மறியோம்.

அல்லலாம் இம்மைக்கு
மறுமைக்கு நரகினுக்
காளாகி மிக அழிந்தோம்
ஆபரனே! கிறீத்தவா்கள் எங்களை
அடுத்துக் கெடுத்தாா்களே

(உடுவில் பாதிரியாா் விலக்கியது பற்றிய(பாடல்)து. வேதனத்துக்காக கிறீத்தவா் களானவா்களை விலக்கியது. பற்றிய அக்காலநிலை)

இவ்வாறு செம்மையெலாம் நிலைகெட்டு பாழ்பட்டு நின்ற போதுதான் நாவலா் அவதாரம் நிகழ்ந்தது. நாவலரின் மதத்துவத்தை நம் காலப்புலவா் இளமுருகனாா் இப்படி வா்ணிக்கிறாா்.

வேற்றுச் சமயவிருண் மண்டி
மேலாஞ்சமயம் குன்றியநாள்
வேத மெழுந்து வாய்விண்டே
மெய்ம்மை நிறுத்தி நின்ற தெனப்
போற்றுமறிவுக் கதிரொளியாற்
போகாப் புன்மை போக்கியருட்
போது மலா்த்தித் தெய்வமணம்
புறத்து மகத்துங் கமழ்வித்தே
ஆற்றா தலந்த தமிழன்னைக்
கருமை யுரைநூற் கலன்பூட்டி
அரசு கட்டின் மிசைவைத்த
ஆறுமுகநா வலரையா;
தேற்றங் காணா திலங்கையிலே
தேம்பு மன்னாள் திறத்திரங்கிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வா; காக்க வருகவெனச்
செவ்வே கூவாய் பெருங்குயிலே

(சோமசுந்தரப் புலவரின் அருமை மகனார் பாலசுப்பிரமணியம் தான் இளமுருகனார் தனித்தமிழ் இயக்கவாதியான அவர் தன் பெயரை இப்படி அமைத்து வழக்கத்திற் கொண்டு வந்தார்) நாவலர் பற்றி கலாகீர்த்தி, டாக்டர் பொன்பூலோகசிங்கம் தான் ஆக்கிய ஈழம் தந்த நாவலர் என்ற நூலிலே இப்படி எழுதியுள்ளார்.

"இருபதாம் நூற்றாண்டின் ஆறாவது சகாப்தத்திலே ஈழநாட்டில் உண்டுபட்ட மாற்றங்கள், தனிப்பாதையிலே ஈழத்துத்தமிழர் செல்லவேண்டிய இன்றியமையாமையை வற்புறுத்தின. அப்போது தோன்றிய தத்துவார்த்த ரீதியான தேவையைப் பூர்த்தி செய்யக்கூடிய சிறந்தவராக ஆறுமுகநாவலர் கருதப்பட்டார்."

மேல்நூல் பக்கம் - 9

இவ்வண்ணம் சிறந்த வியுக்திமானான நாவலர் பெருமானுக்கு எவ்வித நினைவுச் சின்னமுமே இல்லாத நிலைதான் தொடர்ந்தது. ஆண்டு 1968இல் சனவரிமாத முற்பாகத்தில் சென்னையில் நடந்த இரண்டாவது அனைத்துலகத் தமிழ் ஆராய்ச்சி மகாநாட்டு நிகழ்வின் வேளை தமிழுக்காக உழைத்த பெரியார்கட்கு சிலைவைத்தனர். ஆனாற் ஈழத்தமிழ் நாட்டிலும் தென்தமிழ்ப் பூமியிலும் செவ்விய தொண்டாற்றிய ஆறுமுகநாவலர் புறக்கணிக்கப்பட்டார். இந்நிலைப்பாட்டின் செயற்பாடே 1969ஆம் ஆண்டு யூன் மாதம் 29ஆந் தேதி நாவலர் அவர்கட்கு நல்லூரிலே சிலையமைத்தது. இச்சிலையகற்றப்பட்டமையைப் பேராசிரியர் சி.க.சிற்றம்பலமவர்கள் பூடகமாகக் குறிப்பிட்டிருக்கிறார். "நல்லை முருகனின் முன்றிலில் நாவலர் பெருமானின் உருவச்சிலை சாயற்பொழுதில் ஊரறியாமல் கடத்தப்பட்டபோது, நாவலர் பணிமன்றம் அமைத்து! "நாவலர் குரல்" என்னும் சஞ்சிகையை இச்சிலைக்கடத்தலைக் கண்டிப்பதற்காக இவரோடு வெளியிடும் பாக்கியம் நமக்குக் கிடைத்தது. இந்நிகழ்வு எண்பதுகளின் நடுப்பகுதியில் இடம்பெற்றது.

சித்தாந்த ஞானக் களஞ்சியம் பக்கம் - 12

இவ்வரலாற்றுப்பின்னணி நிகழ்வின் பின்னர் எண்பதுகளில் இளைஞர்களின் புலப்பெயர்வினால் பெருந்தொகையான ஈழத்தமிழர் கனடாவிற்குடியேறினர். அவர்களின் பெற்றோரும் வந்து சேர்ந்தனர். சைவாலயங்கள் திறக்கப்பட்டன. எனினும் சைவத்துக்கு நலிவுகள் வராமலில்லை. கடந்த ஆண்டு கனடா நல்லைக்கந்தன் ஆலயத்தில் நாவலருடைய குருபூசை விழா நடந்தபோது தலைவர் கவிஞர் கந்தவனம் அவர்கள் நாவலர் சிலையொன்றைக் கனடாவில் நிறுவவேண்டும் என்ற கருதுகோளை வெளியிட்டார். அதற்கு அவ்வாலய பிரதமகுரு எல்லா ஆதரவும் அளிப்பதாக வாக்களித்தார். அப்பொறுப்பு குருக்களிடமே ஒப்படைக்கப்பட்டது. தமிழ்நாடு கும்பகோணத்தில் உள்ள சுவாமி மலையில் சிலை வடிவமைக்கப்பட்டது. ராதாகிருஷ்ணஸ்தபதி, ஸ்ரீகாந்தாஸ்த் பதிகளின் கைவண்ணத்தில் பஞ்சலோகத்தால் 5.1/2 உயரத்தில் 250 கிலோ எடையுடன் வார்க்கப்பட்ட இச்சிலை கடல்கடந்து 2004 யூலை 14இல் கனடா வந்து நல்லைக்கந்தன் ஆலயத்தில் எழுந்தருளச் செய்தனர்.

ஒன்ராரியோ இந்துசமயப் பேரவை நடத்திய நாவலர் பெருமான் சிலை திருவுலாத்துவக்க விழா நாவலர் பெருமானின் 125ஆவது நினைவு தினத்தையொட்டி கனடாவிற்குக் கொண்டுவரப்பட்ட நாவலர் சிலை தொடக்கவிழா 24-9-2004 றிச்மண்ட்ஹில் பிள்ளையார் ஆலயத்தில் சிவபெருமான் சந்நிதானத்தில் நடைபெற்றது. பகல் 11-00 மணிக்குச் சிவனுக்குக் கும்பாபிடேகம் நடைபெற்று விசேடபூசையும் இடம்பெற்றது. பின்னர் வீதிவலமாக நாவலர்சிலை எடுத்துச்செல்லப் பெற்று கல்யாணமண்டபத்தில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலுவைக்கப் பெற்று சிவனடியார்கள் திருமுறைப் பாராணயஞ்செய்து மலர்தூவி அஞ்சலி செலுத்தினர். ஒரு மணியளவில் அன்னதானம் வழங்கப்பெற்றது. பி.ப. 2-30 மணிக்கு பெரியார் திரு. நா. சிவலிங்கம் அவர்களின் தலைமையில் வாழ்த்துரைகள் சொற்பொழிவுகள் நடைபெற்றது. நாவலர்பெருமான் என்ற மலர் வெளியீட்டுரையை கலாநிதி இ. பாலசுந்தரம் அவர்கள் நிகழ்த்தினார். நினைவு முத்திரையும் அறிமுகம் செய்யப்பட்டது. வீடுகளில் நினைவாக வைத்திருக்கக் கூடிய நாவலர்சிலையொன்றும் அங்கே வழங்கப்பட்டது.

பின்னர் ஒன்றாரியோவிலும் கியூபெக் மாகாணம் மொன்றியோவில் அமைந்த மொன்றியேல் முருகன் கோயில் துர்க்கா ஆலயம், கற்பகவிநாயகர் ஆலயம் என்பனவற்றிற்கு எடுத்துச் செல்லப்பட்டு விழா எடுக்கப்பட்டது சுமார் 15 ஆலயங்களுக்கு நாவலர் சிலைப்பவனி நடந்தது மொன்றியேல் ஆத்மஜோதி முத்தையா அவர்களின் நினைவுப் பாடசாலை மாணவர்கள் சுமார் 130 பேருக்கு மேல் இவ்வாராதனையிற் கலந்து கொண்டனர். மிஸிலாக்கா சைவசித்தாந்த சபை மாணவர்களும் ஸ்காடினோ ஆதிகணபதி அருள்நெறி மன்றச் சைவ மாணவர்களும் இவ்விழாவிற் கலந்து கொண்டனர். பின்னர் 03-11-2004, 04-11-2004, 05-11-2004, 06-11-2004 ஆகிய தேதிகளில் ஹோமம் நடைபெற்று 07-11-2004 ஞாயிற்றுக்கிழமை பிரதிட்டை விழா அருள்மிகு நல்லூர் ஆலயத்தில் நடந்தது. நாவலர் தரிசன விழாவான அன்றும், முதல்நாளும் சிவத்திரு யோகானந்த அடிகளார் (தலைவர் உலகச் சைவப் பேரவை) பங்குபற்றிச்சிறப்பித்தார்கள். பல பெரியார்களின் ஆசியுரைகளும், சொற்பொழிவும் நடைபெற்றது.



நாளது 3-12-2004இல் மேற்படி ஆலயத்தில் கவிஞர் கந்தவனம் அவர்கள் தலைமையில் நாவலர் பெருமானின் 125ஆவது குருபூசை நடந்தது. அன்று கருத்துப் பரிமாற்றலும் நடைபெற்றது.

வாழ்க நாவலர் திருநாமம்

மேன்மைகொள் சைவநீதி
விளங்குக உலகமெங்கும்


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமான கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள் உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்துக்கு ஒப்புதல் தாருங்கள்.**

**தொடர்புகளுக்கு:-**

**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

**கண் வைத்திய நிபுணர்கள்:-**

**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr. சிவந்தா, 021-222 3149**
யாழ். போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பசுவின் பெருமை

பல்கலைப்புலவர் க.சி. குலரத்தினம்

திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் பசுக்கள் வாழ்க என்று பாடியருளினார். பசு சாதுவான பிராணி. அது பால் சுரந்து எம்மை வளர்ப்பது. பெற்ற தாய் பால் ஊட்டியபின், பசுவே பால் சுரந்து ஊட்டுவதால் அது கோமாதா. சைவர் பசுவை தெய்வமாகப் பூசிப்பர். தமிழ் வீரர் பசுவுக்குத் தீமை உண்டாகாமற் போர் செய்வர். பசுக்களுக்குப் பாதுகாப்புத்தேடிக் கொடுப்பதிற் பகை அரசரும் உடன்பாடு தெரிவிப்பர்.

பசுவின் பால், தயிர், நெய், அதன் சாணம், சலம் என்னும் ஐந்தும் பஞ்சகௌவியம். இவை அபிடேகத்திற்குரிய புனிதமான திரவியங்கள், பசுக்காத்தல் பெரிய அறம். பசு இனத்தில் நந்தை, பத்திரை, சுரபி, சுசீலை, சுமனை என்பன தெய்வாம்சமானவை. பசுவைத் தானமாகக் கொடுத்தல் கோதானம் எனப் பெருமை பெற்றது.

பசுவின் உயர்வு கருதியே சைவசித்தாந்தம் ஆன்மாக்களைப் பசு எனக்கூறுகிறது. பசுக்களுக்கு தலைவர் என்ற முறையில் சிவபெருமான் பசுபதி எனத் திருநாமம் பெற்றார். சைவசமயத்தின் முதல் நூலாகிய வேதத்திற்கும் பசு என்னும் பெயரும் உண்டு.

பசுக்களுக்குத் துன்பம் வராமற் காத்தவருள் விசாரசருமர் என்னும் சண்டேசுர நாயனார், ஆனாயனார், திருமூலநாயனார் முதலானோர் மிகப்பெரியவர்கள். சைவநெறியில் விதிக்கப்பெற்ற எண்வகையான ஸ்நானங்களுள் மாருதஸ்நானம் என்பதும் ஒன்று, பசுவின் காலில் பட்டதூசியில் இலட்சுமி கடாட்சம் உண்டு. திருநீற்றை நிறையப் பூசுதல் ஆக்கிநேயஸ்நானம் எனப்பெறும். திருக்கோயிலில் கிடைக்கும் பெரும் பிரசாதமாய திருநீறு பூசுதல் பார்த்திபஸ்நானம் என்பதாகும்.

பசுவை மாடு என்றும், ஆ என்றும், கோ என்றும், தேனு என்றும் தமிழர் போற்றி வளர்ப்பர். தாங்கள் வளர்க்கும் பசுக்களுக்குப் பாதுகாப்பான தொழுவம் அமைத்துச் செல்லப்பெயரிட்டு அழைப்பர். கறுப்பி, சிவப்பி, வெள்ளைச்சி, மறைச்சி, நரைச்சி என்பன எல்லாம் சாதாரணமாக வழங்கும் பெயர்கள்.

பசு இல்லா வீட்டில் அழகு, செல்வம், மங்களம், சுபீட்சம், கீர்த்தி இல்லாவாம் என்றும், பசு இல்லா வீட்டில் இலட்சுமி தரித்து இருக்கமாட்டாள் என்றும், பசு இல்லாத நாடு காட்டுக்கு சமமாகும் என்றும் பாடுவர்.

**"ஆவிலா மனையகம் அழகு குன்றுமே**
**ஆவிலா மனையகம் ஆக்கம் இல்லையாம்**
**ஆவிலா மனையகம் அமலை நீங்குவாள்**
**ஆவிலா நாடெலாம் அடவி யாகுமே"**

இச் செய்திகளை எல்லாம் ஈழத்துச் சிதம்பர புராணமுடையார் நவாலியூர் சோ. இளமுருகனார் அண்மையில் அழகாகக் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஆவினைப் பிள்ளைபோல் அருத்திப் பேணுவர்
ஆவினைப் பெயர்குறித் தழைப்ப ராத்தரு
சேவினைச் சிறப்புற வளர்ப்பர் நெய்களில்
மேவிய பணியெலாம் விரும்பிச் செய்யவே"

பசுவின் உறுப்புக்களெங்கும் தேவர்கள் முதலான பெரியவர்கள் வதிகிறார்கள் என்பதால் பசு புண்ணியப் பிறவி என்பதோடு புனிதமானதும் வழிபாட்டுக்குரியதுமாம் என்னும் கருத்தையும் அழகுறப்பாடுவார்.

ஆக்களி னுறுப்பெலாம் அமரர் வைகுவார்
ஆக்களே இம்மையில் அமுத தேனுவாம்
ஆக்களே இறைவனுக்கு ஐந்து நல்குமற்(று)
ஆக்களே பூதியும் அளிக்கும் அன்பினால்

பசுவின் தலை உச்சியிற் சிவனும், நெற்றியிற் சக்தியும், மூக்கு நுனியில் முருகனும், கொம்புகளிற் பிரமாவும், விஷ்ணுவும், கண்களிற் சூரியனும் சந்திரனும் இன்னும் இன்னும் இதர உறுப்புக்களில் ஏனைய தெய்வமூர்த்தங்களும் இருப்பர் என்ப.

இங்ஙனமாக எங்கள் வாழ்வில் பசுமைப்புரட்சிக்கான வழியில் உதவியாக நிலவி வரும் சூரியனுக்கு நன்றி தெரிவிக்கும் முகமாகத் தைப்பொங்கல் இடுபவராய நாம், அடுத்த நாள் மாட்டுப்பொங்கல் புரிந்து வெண்மைப் புரட்சிக்கு வழியாகவுள்ள பசுவையும் மாட்டையும் போற்றுகின்றோம்.

இன்னும் சைவசமயத்தின் பிரமாண நூல்களுள் ஒன்றாய வேதத்தில் முதற் பகுதியாயுள்ள இருக்கு வேதத்தில் பசுவைப் பற்றிப் பாடிய முனிவர் அதற்கு எவரும் தீங்கு செய்தல் ஆகாது என்றும், அது உருத்திரனின் அன்னை, வசுக்களின் பிள்ளை, அமுதத்தின் மையம், ஆதித்தியனின் சகோதரி, அனைவர்க்கும் அதிதி, பாவம் அறியாத பிராணி என்றெல்லாம் அறியத்தருவர்.

இனி சாமவேத சுலோகங்கள் பரிசுத்தமான பசுவினத்தைப் போற்றுகின்றன. "நீவிர் புண்ணியமானவர்கள். நீங்கள் நன்றாக வாழுங்கள். நன்றாகப் பாலைப் பொழியுங்கள், காலையும் மாலையும் பால் தரும் நீவிர் கன்றுகளுடனும் காளைகளுடனும் இன்னும் பொலிவீராக. இங்கேயுள்ள நீர்நிலைகள் உமக்கு வற்றாத ஊற்றாகுக, நீவிர் இங்கே மகிழ்ச்சியாய் வாழ்வீராக! வளம் பெருக்குவீராக."

இன்புடைத் தைமதிப் பிறப்பி லேழ்பரி
வன்புடைத் தேரவற் போற்றி மற்றைநாட்
பொன்பெறு புதல்வரிற் புரியு மாக்களுக்(கு)
அன்பினாற் பொங்கலும் அமையச் செய்வரால்

இனிப்பசுவினைக் கொன்று தின்னும் பரதேசிப்பழக்கம் வெளிநாட்டு வனாந்தர வாசிகளாலும், பறங்கியராலும், இங்கே ஒரு காலத்தில் வந்ததென்றும், அது புனிதமான சைவநெறிக்கு ஒவ்வாத செயல் என்றும், அதனை உண்ணாதவர் தேவராவர் என்றும் பாடுவர்.

ஆவினைக் கொல்லுதல் அவ்வூன் உண்ணுதல்
பாவிகள் தொழிலை சைவப் பண்பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மேவிய நிரயத்து வீழ்த்தி மாய்க்குமத்**
**தீவினை யொழித்தவர் தேவராவரே**

மத்தியகாலச் சிங்கள மக்கள் வரலாற்றில் பசுமாடு பெருமதிப்புப் பெற்றிருந்தது. ஜெயவர்த்தனபுரத்தைத் தலைநகராகக் கொண்டு அரசு வீற்றிருந்த மாமன்னன் ஆறாம் பராக்கிரமபாகு என்பானின் காலத்தில் அரண்மனை வாசலில் காலை வேளையில் சாணித் தண்ணீர் தெளிக்கும் தமிழ்க்கலாசாரம் நிலவியது. பசுமாடு புனிதமான பிராணியாக கருதப்பெற்று வந்தது. அதனை எவரும் துன்புறுத்தலாகாது என்னும் எழுதாவிதி நிலவியது. அன்றி பசுமாடு நோய்வாய்ப்பட்டு இறந்தால் அதைப் பக்தியுடன் நிலத்தில் புதைக்கும் வழக்கம் நிலவியது.

சிங்கள மக்கள் எவ்வாறாயினும் மாட்டிறைச்சி உண்டதில்லை என்று மஹாவன் (Mahavan) என்பார் 1413ஆம் ஆண்டில் எழுதியுள்ளார். பிற்காலத்தில் பறங்கியர் இலங்கைக் கரை நாடுகளில் செல்வாக்குற்று மாட்டிறைச்சி உண்டு வந்ததைக்கண்ட சிங்கள மக்கள், அப்பறங்கியரை "அடிமைப் பறங்கியர்" என அழைத்தார்கள் என்று ஆங்கிலேய வரலாற்று ஆசிரியர்கள் பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் எழுதியுள்ளார்கள்.

**நன்றி - ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாசமுனிவர் சரித்திரம்.**

## அருள் விருந்து

நம்பிக்கை படைத்திருப்பவனுக்கே ஞானம் விரைவில் ஓங்குகிறது. நல்வாழ்வு வாழ்க்கையில் முன்னேற்றமும் இணைபிரியாதவைகளாம். சுயநலம் நீங்குமளவு பாரமார்த்திகப் பெருவாழ்வு உறுதிபெறுகிறது. ஆசையுள்ள இடத்தில் பக்தியில்லை; பக்தியுள்ள இடத்தில் ஆசையில்லை.

அமைதியாக மனதை வெல்லுபவனே ஒப்பற்ற வெற்றி பெறுபவன் ஆகிறான்.

நல்லார் எண்ணிக்கை அதிகரிக்குமளவு உலகம் நலமுடையதாக மாறியமையும்.

மானுடா, வாழ்க்கையில் எதை நீ மனமாரத் தேடுகின்றாயோ அதைப் பெறுவாய்.

மனதில் அமைதியேற்படுவது புறவுலகினின்று வரும் வசதியை முன்னிட்டு அல்ல.

முக்திக்குக் காரணமாயிருப்பது மனது; பந்தத்துக்குக் காரணமாயிருப்பதும் மனது.

எல்லோர் உள்ளத்திலும் இறைவன் இருக்கிறார்.அதை உணர்ந்து கொள்ளாதவர்க்குத் துன்பம் வருகிறது. மனசாக்ஷியைச் சார்ந்திருக்கக் கற்றுக்கொள்; அது உன்னை ஒரு நாளும் வழி தவறிப்போக விட்டுவிடாது.

காற்றடிக்கிற பக்கம் அது நறுமணத்தையும் சுமந்து செல்கிறது. கீர்த்தியோ காற்றையும் எதிர்த்துப் போக வல்லது.

எண்ணெய் இல்லாது தீபம் எரியமுடியாது. ஆனால் தீபம் எரியாது எண்ணெய் இருக்க முடியும். கடவுளுக்கு அன்னியமாக மனிதனுக்கு உயிர் வாழ்க்கையில்லை. ஆனால் மானுட வாழ்க்கைக்கு அப்பால் கடவுள் இருக்கிறார்.

(தர்ம சக்கரம்; சக்கரம்-8; விகாரிவருடம் ஆடி மாதம்; ஆரம்-7; பக்கம்-242; அருள்விருந்து; 1959ஆம் ஆண்டு; ஆசிரியர்:-சுவாமி சித்பவானந்தா; ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம் (ராமகிருஷ்ணமிஷன்); திருப்பராய்த்துறை போஸ்ட்; திருச்சி ஜில்லா.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடராசப் பெருமானின்
# ஆறுகால அபிஷேக காலங்கள்

### 1. முதற்காலம்

ஒவ்வொரு மார்கழிமாத தெட்சிணாயன நிறைவு நேரத்தில் மார்கழி திருவாதிரை நன்னாளில் நடைபெறுவது. இம்மார்கழி மாதம் திருவாதிரைப் பெருவிழாவில் திருவாதிரைக்கு முதல்நாள் தேர்மீது பெருமான் அமர்ந்தருளி வீதிவலம் வந்து இரவு 10 மணி அளவில் தேரில் இருந்து அம்மை சிவகாமியுடன் இறங்கி இராச சபையாகிய ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளி பின்னர் நடு இரவிற்குப்பின் 3 மணி சமயம் மகா அபிஷேகம் கொள்வார். இது பிராதகக்காலம் (முதற்காலம்) மூலாதாரபூசை. இது தில்லையில் பெருஞ்சிறப்பான உலகம் போற்றும் திருவாதிரை தரிசன நாளாகும்.

### 2. இரண்டாவது காலம்

ஒவ்வொரு மாசி மாதம் சுக்கில (வளர்பிறை) சதுர்த்தசி அன்று இரவு ஏழு மணித் தொடக்கத்தில் பெருமான் எழுந்தருளியிருக்கும் சித்சபையில் இருந்து கனகசபையில் வைத்து நடைபெறும். அதாவது சங்கவகாலம். சுவாதிஷ்டானபூசை. இது மற்றைய சிவாலயங்களில் உதயத்திற்குப் பின் காலை 9 மணிக்கு நடைபெறும் காலசந்தி பூசையாகும்.

### 3. மூன்றாவது உச்சிக்கால பூசை

ஒவ்வொரு சித்திரை மாதம் திருவோண நட்சத்திரத்தன்று இரவு தொடக்கம் 7 மணிக்குப்பின் சபாநாயகரை கனகசபையில் எழுந்தருளச் செய்து நடைபெறும் மகா அபிஷேகம். இது சாதாரணமாக மற்றைய சிவாலயங்களில் பகல் 11-12 மணி அளவில் நடைபெறும் உச்சிக்காலம். மாத்யானீக காலம். மணிபூரகபூசை.

### 4. நான்காவது சாயங்கால பூசை

ஆனி மாதம் உத்திர நட்சத்திரத்தை பத்தாவது திருநாளாகக் கொண்டு நடைபெறும் பிரம்மோற்சவ நாளில் பெருமான் சிவகாமி அம்மையாருடன் ஒன்பதாம் நாள் தேரின் மீது வலம் வந்து அன்று இரவு தேரில் இருந்து இறங்கி ஆயிரங்கால் மண்டபத்திற்கு எழுந்தருளி பின் நடு இரவுக்குப் பின் நடைபெறும் சிறப்புடைய ஆனித்திருமஞ்சனம் ஆகும். சந்தியாகாலம் அநாகதபூசை. இது மற்றைய சிவாலயங்களில் மாலை 5-6 மணி சமயம் நடைபெறும் சாயங்கால பூசையாகும்.

### 5. ஐந்தாவது காலம்

ஆவணி மாதம் வளர்பிறை (சுக்கிலபட்ச) சதுர்த்தசியில் பெருமானை கனகசபையில் எழுந்தருளச் செய்து முன் இரவு 7 மணி தொடங்கி செய்விக்கப்படும் அபிஷேகம். இது மற்றைய சிவாலயங்களில் இரவில் 8-9 மணிக்கு நடைபெறும் இரண்டாங்காலம். இங்கு இது உபசந்தி காலம் - விசுத்தி பூசை.

### 6. ஆறாவது காலம்

புரட்டாசி மாதம் வளர்பிறை (சுக்கிலபட்ச) சதுர்த்தசியன்று பெருமானை கனகசபையில் எழுந்தருளச் செய்து செய்விக்கப்படும் ஆக்ஞாபூசை (அத்தயாமபூசை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இது மற்றைய தலங்களில் இரவில் 9-10 மணி அளவில் நடைபெறும் நித்திய அத்தயாம பூசையாகும்.

இங்கு கூறப்பட்ட ஆறு அபிஷேகங்களில் திருவாதிரை தரிசனம். ஆனித்திருமஞ்சனம் இரண்டு மட்டும் பெருவிழா நிறைவாக ஆயிரங்கால் மண்டபத்தில் உதய காலத்திற்கு முன் நடைபெறும் அபிஷேகம்.

மற்ற நான்கும் கனகசபைக்கு முன்னால் உள்ள சித்சபையில் வைத்து இரவின் தொடக்க 7 மணி சமயம் நடைபெறும்.

இந்த ஆறு புண்ணிய காலங்களில் நடக்கும் அபிஷேகம் தவிர வேறு எந்த சிறப்பு நாட்களிலும் நடராசருக்கு அபிஷேகம் இல்லை. ஆனால் இங்கு பெருமானுக்கு அருகில் பொற்பெட்டகத்தில் இருக்கும் அழகிய திருச்சிற்றம்பல உடையவருக்கு (ஸ்படிக லிங்கத்திற்கு) தான் நித்தம் ஆறு காலமும் அபிஷேகம் நடைபெறும்.

## இந்த ஆறுகால ஆண்டின் பூசை நித்திய ஆறுகால பூசை ஆறுவேளை நேரங்களில் ஒற்றுமை

| | ஒரு நாளில் | ஒரு ஆண்டில் |
|---|---|---|
| 1. | முதற்காலம் காலை 5 – 6 ஒரு நாளில் குளிர்ந்த நேரம் | முதற்கால மார்கழி மாதம் ஆதிரை ஒரு ஆண்டின் குளிர்ந்தகாலம் |
| 2. | இரண்டாம் காலம் காலை 8 – 9 குளிரும் வெம்மையும் கலந்த நேரம் | இரண்டாவது மாசி மாதம் சதுர்த்தசி ஒரு ஆண்டில் குளிரும் வெம்மையும் கலந்த காலம் |
| 3. | மூன்றாவது உச்சிக்காலம் ஒருநாளில் வெம்மை மிகுந்த நேரம் | மூன்றாவது சித்திரை மாதம் திருவோண அபிஷேக காலம் ஆண்டில் வெம்மை மிகுகோடை காலம் |
| 4. | நான்காவது சாயங்கால 5 – 6மணி பூசை நல்ல இனிமையான நேரம் | நான்காவது ஆனிமாத உத்திர அபிஷேக காலம் ஆண்டில் மிக உற்சாகமான காலம் |
| 5. | ஐந்தாவது இரவு 8 – 9 மணி இரண்டாங்காலம் வெம்மைகுளிர் கலந்த நேரம் | ஐந்தாவது ஆவணி மாதம் சதுர்த்தசி காலம் வெம்மை குளிர் கலந்த காலம் |
| 6. | ஆறாவது இரவு 9 – 10 மணி அத்தயாம குளிர்நேரத் தொடக்கநேரம் | ஆறாவது புரட்டாதி மாத சதுர்த்தசி அத்தயாம அபிஷேக காலம் மழைகால தொடக்கம் குளிர்காலம் |

இந்த ஒரு ஆண்டினை ஒரு நாளாகப் பிரித்து அயனம், நாழிகை மணி, தமிழ் ஆங்கில மாதங்களுடன் இணைத்து பூசா காலங்களையும் குறித்து அத்துடன் ஆறு ஆதாரங்களையும் குறித்து படமாக வரைந்து, விளக்கத்துடன் ஆய்வு செய்துள்ள தில்லை நடராசப்பெருமான் ஆறுகால அபிஷேக விளக்கப்படத்தில் காணலாம். இந்த ஆறுகால அபிஷேகம் சிறப்பாக தில்லை நடராசப் பெருமானுக்கு ஏனைய நடராச மூர்த்திகளைவிட அதிகமாய்ப் பொருந்தும்.

**தில்லை நடராசப் பெருமானின் ஆறுகால அபிஷேக தமிழ், வடமொழிப் பாடல்கள்**

**தமிழ்ப்பாடல்**

சித்திரையில் ஓணமுதல் சீரானி உத்திரமாம்
சத்த தனு ஆதிரையும் சார்வாகும் - பத்திவளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசி, அரி, கன்னி, மருவு சதுர்த்தசி மன்று
ஈசர் அபிடேகத் தினமாம்.

**வடமொழி சுலோகம்**

ப்ரத்யப்தம் சாப கும்ப அஜமிதுன ம்ருகராட் கன்னிகா மாச ஷட்ஏக!
பூஜாஹ்றா ப்ராதா முகாஸ்தாகா ஷட்அபிஜ சமயா தேவமாந ப்ரயுக்தாஹ்றா!!
ஆஸன்ருத் தேஸ்வரஸ்ய திரிசிதம் அநு தீஷ்ஈஸ கோவிந்த சௌரீ!
பேஷா ஸ்ரீமூல சக்ராம் புஜ க்ருத வசதே பூர்யேஸே க்ஷேயசேஸ!!

**நன்றி - திருவாவடுதுறை ஆதீன வெளியீடு.**

◆ ◆ ◆ ◆

# ஜபம் செய்யும் முறை

மற்றவர் காதில் விழும்படி ஜபம் செய்வது வாசிகம் எனப்படுகிறது. தன்னுடைய காதில் மட்டும் விழும்படிச் செய்வது உபாம்சு ஆகும். மனத்தினால் மட்டும் செய்தது மானசம் எனப்படும். வாசிகம் ஒரு மடங்கு பயனளிக்கும்.

ஜபம் செய்யும்போது மனம் மகிழ்ச்சியுடனும், சுத்தமாகவும், வேறு கவலைகள் இல்லாமலும் மனம் சமாதானத்துடனும் இருக்க வேண்டும்.

உடலில் மேல் பாகத்தில் ஆடையைப் போர்த்துக் கொண்டு ஜபம், சுற்றிவருதல், நமஸ்காரம், பூஜை, ஹோமம் ஆகியவற்றைச் செய்யக்கூடாது. கிழிந்த ஆடையைத் தரிசித்துக்கொண்டும், ஒரே ஆடையை கீழேயும், மேலேயும் தரித்துக்கொண்டும், மேலாடை (உத்தரீயம்) இல்லாமலும் ஜபம் செய்யக்கூடாது. ஆடையை இடது தோளில் மட்டும் உபவீதம் மாதிரி போட்டுக் கொள்ளலாம்.

சுண்டுவிரல், மோதிரவிரல், நடுவிரல் ஆகியவை முறையே தமோகுணம், ரஜோகணம், சத்வகுணம் முதலிய குணங்களைக் குறிக்கின்றன. அவ்வாறாக நடுவிரல் சத்வகுணத்தைக் குறிக்கின்றது.

சுண்டுவிரல், உயிர்விரல் என்று அழைக்கப்படுகிறது. அது மனிதனுடைய ஜீவதத்துவத்தின் சின்னமாகும். பெருவிரல் பரம்பொருளைக் குறிக்கின்றது.

சுண்டுவிரல் பெருவிரலோடு இணைந்து, மற்ற மூன்று விரல்களும் ஒருங்கே புறத்தே கொண்டிருக்கும் நிலை. ஜீவன் தேவனோடு ஐக்கியமாவதற்கான அவாவைக் காட்டுகிறது. இதுவே சின்முத்திரை என்று அழைக்கப்படுகிறது.

ஜபம் செய்யும்போது ஜீவனை குணங்களிலிருந்து விலக்குவதற்கு அறிகுறியாகச் சத்வகுணத்தைக் குறிக்கும். நடுவிரலின்மீது ஜபமாலையை வைத்துக் கொள்ள வேண்டும்.

சுண்டு விரலின்முனை பெருவிரலைத் தொட்டுக் கொண்டிருக்க ஒவ்வொரு மணியாக நகர்த்திக் கொண்டே ஜபமாலையைச் சுற்ற வேண்டும். இது பரம்பொருளுடன் ஐக்கியமாக வேண்டும் என்னும் ஜீவனின் உயர்ந்த நோக்கத்தைக் குறிக்கிறது மேற்கண்ட செயல் முறையிலே, சுண்டுவிரல் நடுவிரலை ஒரு சிறிது தொடநேரினும், அது சத்வகுணத்தைத் தான் அடைகிறதே ஒழிய மற்ற எல்லாக் குணங்களையும் அடைவதில்லை.

**நன்றி - இந்துமத ஆசார அனுட்டானங்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குறளின் தனித்தன்மை

மட்டுவில் திரு. நா. நல்லதம்பி அவர்கள்

**த**மிழ்மொழி எண்ணற்ற இலக்கியங்களை வளமாகக் கொண்டமொழி. அந்த இலக்கியங்கள் கண்டவற்றுக்கெல்லாம் இலக்கணமும் கொண்டதாய் விளங்கும் மொழி. சங்கத்தமிழ் இலக்கியங்களாகவும், பிற்காலத் தமிழ் இலக்கியங்களாகவும் எண்ணற்ற நூல்கள் தமிழ்மொழியில் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் தலைமையாய் விளங்கும் நூல், திருவள்ளுவர் இயற்றிய திருக்குறள் ஆகும்.

திருவள்ளுவர் ஒரு தமிழ்ப்புலவர்; தமிழ் நாட்டில் பிறந்த தமிழ்ப்புலவர். ஆனால் இன்று கீழைத் தேசத்திலுள்ள ஏனைய நாடுகளும், மேலைத்தேசங்களான ஐரோப்பிய, அமெரிக்க நாடுகளும் திருவள்ளுவர் தமக்கும் உரியவர் என்கிறார்கள்.

மொழி, இனம், மதங்கடந்து, எல்லோரும் ஏற்கக் கூடிய அற நூலாகத் திருக்குறள் அமைந்து இருப்பதானால், திருக்குறள் "உலகப்பொதுமறை"யாக விளங்குகிறது.

அதனால், திருவள்ளுவர் உலகப் பொதுமகனாக, 'மன்புலவர்' ஆக விளங்கும் பாக்கியம் பெறுகிறார்.

இதனாலேதான், 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு' என்று முழக்கமிட்டிருக்கிறார் பாரதியார் என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

திருக்குறளால் தமிழ்மொழியும், திருவள்ளுவரால் தமிழ் மகனும் உலக அரங்கிலே உயர்வதைக் காண்போம்.

"தமிழன் திருக்குலத்தில், தமிழ்த்தாய் திருவயிற்றில்
தமிழ்த்திரு வள்ளுவனார் – கிளியே
"தமிழாய்ப்" பிறந்தாரடீ"

என்று கிளிக்கண்ணி பாடி மகிழ்ச்சி கொள்கிறார் ஒரு புலவர்.

திருக்குறளிலுள்ள ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறட்பாக்களும் அறநெறி பற்றியே கூறுவதனால், திருக்குறள் நூலை "அறம்" என்று பெயரிட்டு அழகு பார்க்கிறார் ஆலத்தூர்கிழார் என்ற ஒரு புலவர். அவர்,

"அறம் பாடிற்றே ஆயிழை கணவ" (புறநானூறு 34) என்ற தொடரில் "அறம்" எனக் குறிப்பிடுவது திருக்குறளையேயாகும்.

திருக்குறளுக்கு, திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம் எனப்பெயர் வைத்து நூல் எழுதியுள்ளார் டாக்டர் மு. வரதராசனார். "திருவள்ளுவம்" என்பதும் திருக்குறளே.

திருவள்ளுவர் தமது புலமைக் கருத்துக்களால், தெய்வப்புலவர், செந்நாப் போதார், பெருநாவலர், பொய்யாமொழிப் புலவர் எனப் பல பெயர்களால் அழைக்கப் பெறுகிறார்.

"செந்நாப்போதார் புனற் கூடற்கு அச்சு" எனத் திருவள்ளுவமாலையில் ஒரு புலவர் கூறியிருக்கிறார். அதனால், கூடல் என்று சொல்லப்பெறும் மதுரையில் இருந்து ஆட்சிசெய்த மன்னவனுக்கு "அணுக்கச் செயலாளராக" இருக்கக்கூடிய அறிவும் ஆற்றலும் உடையவராகத் திருவள்ளுவர் திகழ்ந்திருக்கிறார் என்பதும் பெறப்படுகிறது.

பெருங்கதை என்ற நூலில், கொங்குவேளிர் என்ற புலவர்,

"கோற்றொழில் வேந்தர் கொற்ற முரசம்
பெரும்பணைக் கொட்டிலுள் அரும்பலி ஓச்சி
முற்றவை காட்டிக் கொற்றவை பழிச்சி;
திருநாள், படைநாள், கடிநாள் என்று இப்
பெருநாட் கல்லது பிற நாட்கு அறையாச்
செல்வச் சேனை வள்ளுவ முதுமகன்
நறுவெண் சாந்தமொடு மாலை யணிந்து"

எனப் பாடிய பாடலில், வள்ளுவ முதுமகன் எனக் குறிப்பிடப்படுவது திருவள்ளுவரெ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெனக் கூறுகின்றார். அவர் அரசனுக்குப் பதிலாகத் திருநாள் (அரசரின் திருநாட்கள்) படைநாள் (போர் செய்யும் நாள்), கடிநாள் (திருமணநாள்) ஆகிய பெரு நாட்களில் மாத்திரம் முரசு அறைவார் என்று கூறுகின் றார்.

அரச சபையிலே கடமையாற்றிய, அரசனின் நன்மதிப்பைப் பெற்ற ஒரு புலவர் திருவள்ளுவர். படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண் என அரசியல் பாடிய வள்ளு வனார், மக்களின் வாழ்வியலையும் பாடி யிருக்கிறார்.

அரச போகத்திலிருந்தாலும் ஏழை மக்களின் துன்ப நிலைகளையும் பார்த்திருக்கிறார்.

**இரந்தும் உயிர்வாழ வேண்டின், பரந்து**
**கெடுக இவ் உலகு இயற்றி யான்**
(குறள் 1062)

என ஏழைகளுக்காக் குரல் கொடுத்திருக் கிறார் செந்நாப்போதார்.

திருவள்ளுவர், சைவநெறிச் சூழ லிலே வாழ்ந்தாராயினும், பொது நெறியில் எல்லா மதத்தினரும் தமது தமது எனக் கொள்ளும் வகையில் 'கடவுள் வாழ்த்து' பாடியிருக்கிறார். அருளுடைமை, மெய்யுணர் தல் என்னும் அதிகாரங்களில் சிவநெறி சார்ந்த கருத்துக்கள் காணப்பட்டாலும் கடவுளை ஒரு சமய நெறிக்குள் அகப் படுத்த விரும்பாமல் கடவுட் கொள்கை யைப் பொதுவாக வைத்துப் பாடியிருக் கிறார்.

திருவள்ளுவருக்குப் பின் வந்த புலவர்கள் எல்லோரும் திருவள்ளுவரின் அறநெறியை ஆதரித்தே வந்துள்ளனர். பல புலவர்கள் வள்ளுவரின் அறத்தை மேற் கோள் காட்டியுள்ளனர். பலர் அதே சொற் களை அல்லது அடிகளை அப்படியே எடுத் தாண்டு தமது கொள்கையைப் புலப் படுத்தியிருப்பதையும் காணக் கூடிய தாக இருக்கிறது.

இந்த வகையில் சில எடுத்துக் காட்டுக்களைப் பார்ப்போம்.

செய்ந்நன்றியறிதல் என்னும் அதிகாரத்தில்

**எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம்; உய்வில்லைச்**
**செய்நன்றி கொன்ற மகற்கு** (குறள் 110)

என்ற வள்ளுவர் கூற்றுக்கு விளக்கவுரை செய்தது போலப், புறநானூற்றில் ஆலத் தூர் கிழார் என்ற புலவர் ஒரு பாடல் பாடியுள்ளமையும், அதிலே, திருக்குறளை 'அறம்' என்ற பெயரால் சுட்டியுள்ளமை யையுங் காணலாம்.

**"ஆன்முலை அறுத்த அறனி லோர்க்கும்**
**மாணிழை மகளிர் கருச்சிதைத் தோர்க்கும்**
**குரவர்த் தப்பிய கொடுமை யோர்க்கும்**
**வழுவாய் மருங்கிற் கழுவாயும் உளவென,**
**நிலம்புடை பெயர்வ தாயினும் ஒருவன்**
**செய்தி கொன்றோர்க்கு உய்தி இல்லென**
**"அறம்" பாடிற்றே, ஆயிழை கணவ!"**
(புறம் 34)

என்பது பாடல். மேலும், 'சோமேசர் முது மொழி வெண்பா'வில்.

**"தோன்றாவகைகரந்தும்தோன்ற லைக்கண்டுள்நெகிழ்ந்து**
**தோன்றின் றான் முன்புநளன் சோமேசா - தோன்றுகின்ற**
**அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ் ஆர்வலர்**
**புன்கண்ணீர் பூசல் தரும்"**

என்ற நேரிசை வெண்பாவில் திருக்குறட் பாடலைப் (குறள் 77) பின் இரண்டு அடிகளாக்கிப் பாடியுள்ளார் அப்புலவர்.

**"இருந்து ஓம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்து ஓம்பி**
**வேளாண்மை செய்தற் பொருட்டு"**
(குறள் 81)

எனத் திருவள்ளுவர் காட்டிய நெறிப்படி, கண்ணகி வாழ்ந்தமையை இளங்கோ வடிகள்,

**"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்**
**துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்**
**விருந்து எதிர்கோடலும் இழந்த என்னை"**

என அவள் கோவலனுக்குக் கூறி வருந்து வதாகக் காட்டுதல் சிந்திக்கத் தக்கது. திருவள்ளுவர் கூறும்,

**"தென்புலத்தார் தெய்வம் விருந்து,ஒக்கல்,தான் என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை"**
(குறள் 43)

என்ற பாடலில் காட்டப் பெற்றுள்ளவர்களே பெரும்பாலும் இளங்கோவடிகள் பாடலிலும் காணப்படுவது கவனிக்கத்தக்கது.

மேலும் சிலப்பதிகாரத்திலே, தேவந்தி, காமனை, வழிபட்டால் கணவ னைச் சேர்ந்து இன்புறுவர் எனக் கண்ணகி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யிடம் சொன்னபோது, கண்ணகி அதற்கு இணங்கவில்லை. அவள், "தெய்வந் தொழாஅள் கணவற்றொழு தெழுவாள்" என்று வள்ளுவர் கூறுகின்ற பெண்ணாகக் காட்டப் பெறுவது காணலாம்.

இவ்வாறு, உலகப் பொதுமறை யான திருக்குறளைப் பாடியிருந்தாலும், புலவர்களுக்கெல்லாம் தலைமையான புலவராக இருந்தாலும் திருவள்ளுவர் தன்னடக்கமாகவே நீதிநெறிகளைப் பாடியுள்ளமை சிறப்பானது. இதனை அவர் பாடலிலேயே காணமுடிகிறது.

"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"
(குறள் 423) என்பதும்
"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு"
(குறள் 355) என்பதும் வள்ளுவர் சொன்ன வேதங்களேயாம்.

குறள் வெண்பாக்களால் ஆன நூல்களாகத் திருக்குறளும் உமாபதிசிவாச் சாரியார் இயற்றிய திருவருட்பயன் என்ற நூலும் இருக்கின்றன. திருவருட்பயன் சமய நூலாக, நூறு குறள் வெண்பாக்களை மாத்திரம் கொண்டநூல். ஆனால் திருக் குறள் நூல், அறம், பொருள், இன்பம் ஆகிய முப்பொருளையும் விளக்கி, வீடு பெறுவதை விளங்க வைப்பதான ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களை உடை யதாய், உலகிலுள்ள அனைத்து மக்களின தும் வினாவுக்கு விடைபகர்வதாய் உலகப் பொதுமறையாய் விளங்கும் பெருமை பெறுகிறது.

ஒன்றே முக்கால் அடியில் குறளாய் அமைந்தாலும் பல நூறு அடிகளில் பொருளால் விரித்துரைக்கக் கூடியது திருக்குறட்பாக்கள்.

"பரந்தபொருள் எல்லாம் பார் அறிய, வேறு
தெரிந்து தினந்தோறும் சேரச், சுருங்கிய
சொல்லால் விரித்துப் பொருள் விளங்கச் சொல்லுதல்
வல்லார் ஆர் வள்ளுவர் அல்லால்"?
என அரிசில்கிழார் என்ற புலவர் புகழ்ந்து உரைத்தமை ஒன்றும் புதுமை அன்று.
ஔவையார் திருக்குறள் பற்றிக்குறிப்பிடு கையில்,

"அணுவைத் துளைத்து ஏழ் கடலைப்புகட்டிக்
குறுகத் தறித்த குறள்" என்று பாராட்டியுள்ளார்

இவ்விதமாகத் திருவள்ளுவமாலை தொடுத்த புலவர்கள் ஐம்பதுக்கும் மேற் பட்டோர் திருக்குறளின் பெருமையை வியந்து போற்றியுள்ளார்கள்.

இந்த வகையில் மனம் முக்கிய மான ஒரு இடத்தை வகிக்கிறது. ஆகவே, இந்த ஆயிரத்து முந்நூற்று முப்பது குறட்பாக்களினதும் சுருக்கமாக விளங்கும் பாடல் இதோ,
"மனத்துக்கண் மாசுஇலன் ஆதல்; அனைத்தறன்;
ஆகுல நீர பிற" (குறள் 34)

'அறம் செய்ய விரும்பு' என்றும், 'இயல்வது கரவேல்' என்றும் ஔவையார் கூறியிருப்பதிலும் 'மனம்' சம்பந்தப்பட்டிருப் பது காணலாம். மனம் விரும்பினால் அறம் தானாக நிகழும் என்பதும், அறத்தைத் தவிர்க்காதே என்னும் பொருளில் இயல் வது கரவேல் எனக் கூறப்பெற்றதும் காண லாம்.

மேலும் திருக்குறட்பாக்கள்அமைந்த முறையில் ஒரு நுட்பம் இருக்கிறது. தமிழ் 'நெடுங்கணக்கிலுள்ள எழுத் துக்கள் 'அ' கரத்தில் தொடங்கி 'ன' கரத்தில் முடிகின் றன. அதுபோல, "அகரமுதல......" எனத் தொடங்கி பாடல்கள் ".....முயங்கப்பெறின்" என னகர ஈற்றில் முடிகின்ற சிறப்புஞ் சிந்தனைக்குரியது.

இவ்விதமாக, வையத்துள் வாழ் வாங்கு வாழ வழிகூறிய வள்ளுவப் பெருந் தகை, வீடு பேறு எவ்விதம் அமையும் எனப்பல இடங்களில் காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக,
"வீழ்நாள் படாமை நன்று ஆற்றின், அஃது ஒருவன்
வாழ்நாள் வழி அடைக்கும் கல்" (குறள் 38)
என்ற பாடலைக் கூறலாம். நன்று ஆற்றுதலாகிய இத்தக்கால், வாழ்நாளில் வருகின்ற துன்பங்களின் வழியை அடைக்கும் கல்லாகவும், பிறவிகள் வருகின்ற வழியை அடைக்கும் கல்லாகவும் இருபொருள் படக்கூறியுள்ளமை உணர்ந்து இன்புறத் தக்கது.

**நன்றி: இலக்கிய அமுதம்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரதோஷம் பிறந்த கதை

**எம். எஸ். சுப்பிரமணியம்,** தமிழ்நாடு

**சகாதேவன், ஜோதிடக் கலையில் முதல்வனாக விளங்கியவன்.** அவனிடம் ஜோதிடம் கேட்கிறான் கண்ணன். "சகாதேவா! துரியோதனாதியர்களை அழித்து பாண்டவர்களைக் காக்க வேண்டும். அதற்குப் பாரதப் போர் ஒன்றுதான் வழி என்றாகிவிட்டது. எனவே போர் தொடங்குவதற்கு ஏற்ற நல்ல நேரம் எது என்று நீதான் கூறவேண்டும்."

"என்ன கண்ணா! எல்லாம் அறிந்தவர் தாங்கள் எது எப்படி எங்கு எப்பொழுது நடைபெற வேண்டும் என்பது தங்களுக்கு நன்றாகத் தெரியும். அப்படி இருந்தும் இந்தச் சிறுவனிடம் வந்து நேரம் காலம் குறித்துத் தரச் சொல்கிறீர்களே! இது என்ன புது விளையாட்டு"

"விளையாட்டு இல்லை சகாதேவா.உண்மைதான் நான் எல்லாம் அறிந்தவனாக இருக்கலாம். இருந்தாலும் ஜோதிடக்கலையில் வல்லவன் என்ற பெயர் எனக்கில்லையே! அதனால்தான் உன்னிடம் கேட்டேன். நீ சொன்னால்தான் நீ கற்ற கலை மதிக்கப்படும். நானே கலையையும் கலைஞர்களையும் மதிக்காமல் இருக்கலாமா? பிறகு மக்கள் எப்படிக் கலைஞர்களை மதிப்பார்கள்? ஆகவேதான் உன்னிடம் கேட்கிறேன்" இந்த விளக்கத்திற்கு மறுப்புக்கூற சகாதேவனால் முடியவில்லை.

"கண்ணா! இப்பொழுதும் சொல்கிறேன் சொல்பவன் நான் ஆனாலும் எனக்குள்ளே இருந்து கருத்து சொல்ல வைப்பவன் நீயே. எப்பொழுது சிவபெருமான் நடனத்திற்கு நீ மத்தளம் இசைத்தாயோ அந்த நேரம்தான் பாரதப் போர் தொடங்குவதற்கு ஏற்ற நேரமாகும்" என்றான் சகாதேவன்.

"அதாவது... பிரதோஷ காலம் என்கிறாய்! அப்படித்தானே..?"

"அப்படியேதான் கண்ணா! எனக்கு ஒரு சந்தேகம். சிவபெருமானின் ஆட்டத்திற்கு தாளம் போடுவது நந்தி தேவரின் வேலை ஆயிற்றே. நீங்கள் ஏன் அவருக்குப் போட்டியாகப் போனீர்கள்!"

"நான் எங்கே போட்டியாகப் போனேன்? நந்திதேவர் வழக்கம்போல் மத்தளம் கொட்ட முடியாமல் போனது அதனால் அந்த சமயத்தில் மட்டும் நான் அப்பணியைச் செய்தேன்"

"நந்தி தேவருக்கு என்ன ஆயிற்று? கை சுளுக்கிக் கொண்டதா?"

"இல்லை பைத்தியம் பிடித்துவிட்டது. தன்னை மறந்து வெகுநேரம் சிரித்துக் கொண்டே இருந்தார்!"

"கொஞ்சம் விளக்கமாகக் கூறுங்களேன்!"

"தசமிதிதியில் தேவர்கள் பாற்கடலைக் கடையத்தொடங்கினர். ஏகாதசிதிதியன்று மத்தின் கயிறாக இருந்த வாசுகி கக்கிய ஆலமும், பாற்கடலிலிருந்து வெளிப்பட்ட காலம் எனும் நஞ்சும் இணைந்து ஆலகாலமானது. கொடிய நஞ்சான அதைத் திரட்டி எடுத்துவர நந்தியையும் சுந்தரரையும் அனுப்பினார் சிவனார்."

நந்தி நஞ்சினைத் திரட்டித்தர சுந்தரர் எடுத்துவந்தார். ஈசன் அதனை விழுங்க பரிதவித்த ஈஸ்வரி அவர் கழுத்தைப் பற்ற ஈசன் விஷம் கழுத்தில் தங்க திருநீலகண்டரானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாற்கடல் மீண்டும் கடையப்பட்டது. கடைசியாக அமுத கலசத்துடன் தன்வந்திரி தோன்றினார். தேவர்கள் மகிழ்ச்சிக் கூத்தாடினர். அமுதத்தை தாமே உண்ண வேண்டும் என்று அவசரப்பட்டனர். திருநீலகண்டரையும் அவரது தியாகத்தையும் அடியோடு மறந்தனர். அமுதம் கிடைத்தநாள் "துவாதசி".

தேவர்களின் நன்றி மறந்த செயலை எண்ணி உமாதேவி சினங்கொண்டாள். "சுவாமி, நந்தியை அனுப்பி தேவர்களை உடனே வரச் செய்யுங்கள். அவர்களுக்கு சரியான பாடம் புகட்டுவோம்" என்றாள்.

"நந்தியையா? நந்தி என்ன செய்கிறான் என்று பார்" என்றார் பரமன்.

நந்தி தொடர்ந்து தனக்குத் தானே சிரித்துக் கொண்டிருந்தார். அதைக் கண்ட தேவி,

"சுவாமி, நந்திக்கு என்ன ஆயிற்று?" என்றாள்.

"தேவி, அவன் ஆலகால விடத்தை திரட்டிக் கொண்டு வந்தானல்லவா? தேவர்களைத் தாக்கிய விஷம் அவனைத் தாக்கவில்லையே! அதனால் அவனே மகாசக்தி உடையவன் என்று எண்ணிக் கொண்டான். மகிழ்ச்சியில் தன்னை மறந்து சிரித்துக் கொண்டேயிருக்கிறான். தலைகனம் என்ன பாடுபடுத்துகிறது பார் அவனை!" என்றார் பரமன்.

"என்னதான் ஆணவத்தால் ஆடினாலும், நந்தி நம் பிள்ளை போன்றவன் இல்லையா? அவனுக்குக் கருணை காட்டுங்கள் சுவாமி" என்றாள் தேவி.

"சிவபெருமான், நந்தியின் கொம்புகளுக்கு இடையில் நின்று நடனம் ஆடி அவன் கர்வத்தை நீங்கச் செய்தார். அப்பொழுது நந்தியால் எப்படி மத்தளம் கொட்ட முடியும்? எனவே, தேவர்களுடன் அங்கு சென்றிருந்த நான், மத்தளம் கொட்டி தாளம் போட்டேன்" மகாதேவன் ஆட, தான் தாளமிட்டதை விவரித்தார் கிருஷ்ணர்.

தேவர்களும் அரனின் ஆடலையும் அரியின் தாளத்தையும் ரசித்தனர். இந்தத் திருநடனம் நிகழ்ந்த நேரமே பிரதோஷ நேரம்.

பிரதோஷ கால வழிபாடு, தோஷங்கள் அனைத்தும் நீக்கி வாழ்வில் சந்தோஷம் நிலவச் செய்யும்.

* * *

## மணிவாசகம் பாடும் திருவாசகம்

மணிவா சகர்தந்த திருவா சகமகிமை
படிப்போர்க்கு தருமுத்தி ஆனந்தமே
மண்மீதில் எமைவாட்டும் துயர்தீர்க்கும் மருந்தாகி
தரும்இன்ப சுகமென்னும் முத்தாரமே
பணிவோடும் சிவன்பாத மலர்நாட வழிகாட்டும்
பாரிலொளிச் சுடரான தமிழ்நாதமே
பரமனடி பணிவார்க்கு இனியில்லை துயரென்னும்
அபயமொழி அமுதொத்த மருந்தாகுமே


தணியாத பெருங்காதல் ஊற்றாகித் தரணியில்
தந்ததமிழ் மறைவல்ல இசைபாடுமே
தளிர்க்கரத்தில் ஏடேந்தி எழுதா மறையழகன்
எழுதியதோர் பெருமை தனைப்பாடுமே
பிணிதீர்க்கும் மருந்தெனவே கடையூழிக் காலத்தே
தான்கேட்டு இசையின்ப சுவைமாந்தவே
பிறைசூடும் பேரழகன் கேட்டதிறங் கண்டின்ப
மணிவா சகர்பாடும் திருவாசகம்

கவியாக்கம்: **சு. குகதேவன்**
தெல்லிப்பழை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# ஆத்ம சாந்தியுரை




மு. அற்புதநேசன்
(அற்புதன்)



மு. பரமானந்தன்
(ஆனந்தன்)




வி. ராம்குமார்
(ஆசிரியர்)



அ. யதீசன்



அ. காங்கேயன்



இ. தயாபரன்



வி. தர்ஷன்

அச்சுத்தொழில் சார் இயந்திரம் திருத்தும் வல்லுனர் உலகில் புகழ்பூத்த குடும்பமாக விளங்கிய குடும்பம் முத்துக்கிருஷ்ணர் (மாயவர்) குடும்பம். முத்துக்கிருஷ்ணர் அவர்கள் சுன்னாகம் திருமகள் அழுத்தகத்தில் ஈழகேசரி பொன்னையா அவர்களின் வழிகாட்டலில் 1930களில் அச்சுத்தொழில் இயந்திரம் திருத்தும் கலையை ஆரம்பித்தார்கள். தொடர்ந்து திருமகள் அழுத்தகத்துடன் அதீத ஈடுபாடு காட்டியவர் முத்துக்கிருஷ்ணர் (மாயவர்) அவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதனைத்தொடர்ந்து இவரின் புதல்வர்கள் அற்புதன், குமார், ஆனந்தன் ஆகிய மூவரும் தந்தையாரின் கீழ் தொழில் பழகி வரலானார்கள். தந்தையாரைத் தொடர்ந்து குறிப்பாக அற்புததேவன் அவர்கள் 1975களில் தந்தையாரின் தொழில் நுட்ப வல்லமையை தானும் பெற்று அச்சு இயந்திரம் திருத்துதலில் ஈடு இணையற்ற ஒருவராக யாழ். குடாநாட்டில் திகழ்ந்தார். இக்காலகட்டத்தில் யாழ். வலிகாமம் பகுதி மக்கள் இடம்பெயர வேண்டிய சூழலில் எமது திருமகள் அழுத்தகத்தின் பாரிய இரண்டு இயந்திரங்களைக் கழற்றி பாதுகாப்பாக வைப்பதற்கு இவர் ஆற்றிய சேவை மறக்கமுடியாத ஒன்று. இவ்வியந்திரகளை எவ்வாறு நகர்த்துவ்து என்று நாம் யோசித்துக் கொண்டிருந்த நேரத்தில் எம்மை ஆற்றுப்படுத்தி பாதுகாத்த பண்பை நாம் மறக்கமுடியாது. இதனைத் தொடர்ந்து நவீன பல நிறக்கலை இயந்திர 'சாதனங்களைத் திருத்தும் கலையிலும் முன்னணியில் திகழ்ந்தார். இது மட்டுமன்றி தனது இரு புதல்வர்களையும் இத்தகைய நவீன இயந்திர சாதனங்களைத் திருத்தும் பணியில் மும்முரமாக ஈடுபடுத்தி உழைத்துக் கொண்டிருந் தார்கள். இவ்வாறு யாழ் குடாநாட்டில் அச்சுஇயந்திர சாதனங்கள் திருத்தும் பணியில் முன்னின்றவர்கள் கண்ணூறுபட்டது போன்ற நிகழ்வு 2004 மார்கழி 26ஆம் நாள் ஏற்பட்டுவிட்டது. தாயாரின் ஆன்மா சாந்திக்கிரியை நடாத்த கீரிமலை சென்ற வேளை தாயாருடன் இவரின் இரத்த உறவுகள் அனைவரும் சுனாமி அனர்த்தத்தால் மறைந்து விட்டார்கள். இவர்கள் மறைந்தும் மறையாதவர்கள். இவர்களின் பணி, சேவை, பணிவு, தன்னடக்கம், தொழில்நுட்பம் என்பவை இவர்களைச் சார்ந்த குடும்ப அங்கத்தவர்களை வாழவைத்துக் கொண்டிருக்கும். ஆகவே மேற்கூறிய சுனாமி அனர்த்தத்தால் கடல் நீரினால் காவு கொள்ளப்பட்ட அனைவரினதும் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல துர்க்கை அம்பிகையை வேண்டிப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!**

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

**சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி, J.P**
தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முத்து விழாவில்



உரையாற்றும்
காட்சிகள்





திரு. தெ. ஈஸ்வரன்

பல்கலைக்கழக
துணை வேந்தர்
பேராசிரியர்
S.மோகனதாஸ்

கலாநிதி. குமாரசுவாமி சோமசுந்தரம்

## விழாவில் கலந்து கொண்ட அறிஞர்கள், ஆத்மீகப் பெரியவர்கள்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருணகிரிநாதர்



ஸ்ரீ ரமண மகரிஷி

அட்டைப்பதிப்பு : பிள்ளையார் அச்சகம், 676, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org